உ

சிவமயம்

# தடம்

## 31ம் நாள் நினைவு மலர்



அமரர்

## திருநாவுக்கரசு சத்தியசீலன் (JP)

முன்னாள் தவிசாளர் ம.தெ.எ.பற்று, முன்னாள் தலைவர்-
புளியடிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை,
தலைவர்-வேளாளர் குடி, வெளிக்கள உத்தியோகத்தர் (SWO)

எருவில் களுவாஞ்சிக்குடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

02.02.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 31ம் நாள் நினைவு மலர்



மண்மகிழ்

1957 - 01 - 14

கண்நெகிழ

2026 - 01 - 03

அமரர்

## திருநாவுக்கரசு சத்தியசீலன் (JP)

முன்னாள் தவிசாளர்- ம.தெ.எ.பற்று, முன்னாள் தலைவர் புளியடிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை, தலைவர்- வேளாளர் குடி, வெளிக்கள உத்தியோகத்தர் (SWO)

### திதி வெண்பா

இக பரந் தன்னில் விசுவாவசு வருடத்து
மார்கழித் திங்கள்
அகமுருகி அணைந்த தேய் பிறை
பிரதமைத் திதியே
சாந்த ஒளித் தீபமாய் பிரகாசித்த
சத்தியசீலன்
அத்தனடி முத்தி பதம்
பெற்ற நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம மலருக்கு ஆத்ம சமர்ப்பணம்

வள்ளுவப்பெருந்தகையின்

**"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"**

என்ற வாக்கிற்கிணங்க புகழோடு தோன்றி வாழ்ந்து இறைவனடி சேர்ந்த பெருமை அமரர் தி.சத்தியசீலன் அவர்களைச் சாரும்.

எருவில் கிராமத்தில் திருநாவுக்கரசு தங்கமலர் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த சத்தியசீலன் எளிமையான தோற்றமும், இனிமையான சுபாவமும் கொண்டவர். எல்லோரிடமும் அன்புடன் பழகுபவர், தன்னுடைய சமயத்திற்கு தன்னை ஈடுபடுத்தி சமயப் பணிகளை மேற்கொண்டதோடு, சமூகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்தியவர். இவர் நல்ல மனிதராய் வாழ்ந்து இன்று எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம் எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்.

அன்னாரின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இங்ஙனம்**
**கிரிஜாஜோதி**
**அகோரசிவாச்சாரியார்**
**சிவஸ்ரீ.இரா.கு.கோபாலசிங்கம் குருக்கள்**
**"அபிதாலயம்" எருவில் கிழக்கு**
**பாரதிபுரம்**
**களுவாஞ்சிகுடி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சத்தியன் நடந்து வந்த பாதை

மட்டு நகரின் தெற்கே மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவில் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் எருவில் எனும் நற்பதியில் அமரர்கள் திருநாவுக்கரசு தங்கமலர் தம்பதிகளின் அன்பு மகனாக 1957.01.14ம் திகதி பிறந்தவர். எருவில் கிராமத்திற்கு முகவரி தேடித்தந்த சோமசுந்தரம் உடையாரின் பேரனாகவும் எதிர்மன்னசிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) தம்பிராசா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்) ஆகியோரின் பெறாமகன் எனும் சிறப்பைக் கொண்டவர். ஆரம்பக் கல்வியை எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை பட்டிருப்பு மகா வித்தியாலயத்திலும் கற்றார். தனது பதினெட்டாவது வயதில் தந்தையை இழந்தார். தனது சகோதரர்களாகிய நிர்மலாதேவி, புஷ்பராணி, கமலபூசணி, சோமசேகரம், புவனேந்திரன் ஆகியோரின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக சுயதொழிலில் ஈடுபட்டார். தனது தாய் தங்கமலர் அவர்களின் வழிகாட்டலில் குடும்பத்தை பராமரித்து வந்தார். தனது பெரியப்பாமார்களின் அரசியலைத் தொடர்ந்து அரசியலில் ஈடுபட்டார். தமிழ் அரசியல் கட்சிகளின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் கண்டார். பிரதி தவிசாளராகவும், தவிசாளராகவும் மகுடம் சூட்டினார். பற்பல பணிகளைப் புரிந்தார். ஐக்கிய தேசிய கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளராகவிருந்து அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டார். தமிழ் ஒட்டுக்குழுக்களின் அச்சுறுத்தலுக்கும் தாக்குதலுக்கும் ஆளாகினார். இருந்தும், தனது கொள்கையிலிருந்து விடுபடாமல் அரசியலில் செயற்பட்டார்.

அமரர் சத்தியன் அவர்கள் இயல்பாகவே சமய, சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டவர். எல்லோரிடமும் அன்பாகப் பழகியவர். யாரிடமும் முரண்படாமல் இணக்கப்பாட்டுடன் செயற்படுபவர். புன்சிரிப்பாளன் மக்களின் இன்ப துன்பங்களில் ஈடுபடுபவர். சமூக நலன்புரி அமைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(SWO) வெளிக்கள உத்தியோகத்தராகப் பணிபுரிந்தவர். நலிவுற்ற மக்களுக்கு சேவைகள் பல செய்தவர். பழுகாமத்தைச் சேர்ந்த வனகேஸ்வரி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களை திருமணம் செய்தார். இல்லறத்தை நல்லறமாக்கினார். இதன் பயனாக மேருகாசன் எனும் மகனை பிள்ளைச் செல்வமாகப் பெற்றார். தனது மகனின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். தனது மகன் மீது உயிரை வைத்திருந்தார். இதன் காரணமாக தனது மகன் மேருகாசன் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளை பெற்றார். அத்தோடு க.பொ.த சாதாரண பரீட்சையில் 9A சித்தியினை பெற்று க.பொ.த உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கல்வி கற்க வைத்தார். இவ்வருடம் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதியவர். பொறியியலாளராக வேண்டும் என எண்ணினார். அவருடைய எண்ணம் ஈடேறும் போது அவர் உயிருடன் இல்லை என்னும் போது கவலையாக இருக்கின்றது. பரீட்சைப் பெறுபேறு வெளிவரும் போது அச்செய்தியினைக் கேட்டு இன்புறுவதற்கு சத்தியன் இல்லையே என்பதை நினைக்கும் போது மனம் அழுகின்றது. இருப்பது பொய் போவது மெய் என்பதை இதயம் மறுக்கின்றது. ஆளுக்கொரு தேதியை இறைவன் குறித்திருந்தாலும் விரைவாக எம்மை விட்டுச் செல்வார் என நினைத்துக் கூடப் பார்க்கவில்லை ஆட்கொல்லி நோய் தன்னை ஆட்கொண்ட போதும் தன் உயிரைப் பறிக்கும் என எதிர்பார்க்கவில்லை.

எருவில் புளியடிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையில் தலைவராகச் செயற்பட்டவர். ஆலய அபிவிருத்தியில் கூடிய பங்களிப்பு நல்கியவர். தனது குடும்ப சார்பாக நவக்கிரக கோவில் அமைத்துக் கொடுத்தவர். ஆலய கட்டுமானப் பணிகளை அடியவர்களைக் கொண்டு நிறைவேற்றியவர். பிள்ளையாரை நம்பி வழிபடுகின்ற உங்கள் எண்ணங்கள் நிறைவேறும் என தும்பிக்கையான் மீது நம்பிக்கையூட்டும் ஆலய வழிபாட்டில் எந்த நேரமும் ஈடுபடுவார். தனக்கு பொல்லாத நோய் வந்த பின்னர் தலைவர் பொறுப்பிலிருந்து நீங்கி ஆலோசகராகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டவர். ஆனால் தொடர்ச்சியாக ஆலயப் பணியில் ஈடுபட்டவர். மேலும் கண்ணகையம்மன் ஆலய பரிபாலன சபை உறுப்பினராகச் செயற்பட்டவர். வேளாளர் குல மக்களின் தலைவராகப் பணிபுரிந்தவர். கண்ணகை அம்மன் ஆலய வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பு நல்கியவர். வேளாளர் குடிமக்களின் திருச்சடங்கினை சிறப்பாக வழி நடத்தியவர். அம்மக்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்பவர். அம்மக்களுக்கு ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். எருவில் வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராகச் செயற்பட்டவர். மக்கள் நலனில் அக்கறை கொண்டு தொழிற்பட்டவர். புளியடி பிள்ளையாருக்கு திருத்தொண்டுகள் புரிந்தவர். திருவாதிரை தீர்த்த நாளன்று ஆலய வழிபாட்டில் ஈடுபட்டவர் வீடு சென்று மறு நிமிடமே இறைவன் உயிரை தன்னுடன் இணைத்துக் கொண்டார். உயிரை தருவதும் எடுப்பதும் அவன் கையில் உண்டு. அதை யாராலும் மாற்ற முடியாது. புனித நட்சத்திரமான திருவாதிரை தீர்த்தமன்று உயிர் சென்றமையால் அவருடைய உயிர் புனித தன்மையடையும், நிச்சயம் மோட்சம் கிடைக்கும் என்பது உறுதி. அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

**குடும்பத்தினர் சார்பில் சகோதரர்கள்**<br>
**நிர்மலாதேவி**<br>
**புஸ்பராணி**<br>
**கமலபூசணி**<br>
**புவனேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம் பிடித்த கணவனை இழந்து கதறி அழுகின்றேன்..

இனிக்கின்ற வாழ்வு தந்து
இதயம் இருத்தியே - எந்தன்
இருட்டறையை நீக்கியொளி
வீசி நின்றவரே!
மனைவியெனும் சொற்பதத்தைக்
காத்து நின்றவரே -எந்தன்
மணாளனே மறைந்துவிட்ட
மர்மம் என்னவோ!

சுகவாழ்வு தந்தென்னைக்
காத்து நின்றாயே! - நான்
சுதந்திரமாய்க் கடமையாற்றக்
கரம் கொடுத்தாயே!
செல்ல மனைவியாக என்னை
நேசித்த தலைவா - நீயும்
சென்ற இடம் தெரியாது
தவிக்கிறேன் முதல்வா!

குறை சொல்வதில்லை நீங்கள்
குற்றம் காண்பதில்லை -எனக்கு
நிறைவான வளங்கள் தந்து
நிழல் தந்தவரே!
மறை வானில் சூரியனார்
மறைந்தது போல — என்னை
மறந்துவிட்டொழிந்து கொண்ட
மாயமென்னவோ!

கனவில் வந்து காட்சி காட்டி
காணாமல் போகிறாய் - எந்தன்
நினைவில் வந்து எனை வருந்தி
நிழலாகிறாய்!
என்ன கொடுமை செய்தேனோ
என் தலைவனே! - எனக்கு
இந்த விதி கிடைப்பதற்கு
இறை கட்டளையோ!

...............

**திருமதி.ச.வனகேஸ்வரி(மனைவி)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அப்பாவுக்கு........

சிறுவயது முதலாக சீர்கல்வி தான் பெறவே
சீராக எனை அழைத்துச் சீக்கிரமாய் செய்வீரே
பிழை செய்யின் தண்டிப்பாய்,
பின்பு என்னை மகிழ்விப்பாய்!
இனிதாகச் சுவைத்திடவே இனிய பண்டம் எனக்களிப்பாய்!
கனிவாகப் புத்தி சொல்வாய்! கடுங்கோபம் காட்டமாட்டாய்
இனி என்ன நான் செய்வேன் என்னுடைய-அப்பாவே



நன் மதிப்புக் கொண்டவரே நீங்கள்
நற்பெயரும் உடையவரே நீங்கள்
நாளாந்தம் நான் உயர்வடைய
நற் செயல்கள் புரிந்து வந்தவரே!
நீங்காத நினைவுகள் நிலைத்திருக்க
தூங்காது என்கண்கள் இனியப்பா
பாங்கான பிள்ளையாக நான் வளர
பக்குவமாய் எனக்கருள்வாய் என் அப்பா!

மாமனிதர் நீங்கள் எனக் காட்டியது
இறுதி ஊர்வலத்திற்கு வந்த மக்கள் வெள்ளம்
கொட்டும் மழை என்று கூட பாராமல்
சிட்டாகப் பறந்து வந்தார் மக்கள் பலர்
பட்டுப் போனது உங்கள் யாக்கையப்பா!
கட்டுக் கடங்கவில்லை அப்பா என்துயரம்
விட்டுப் பிரிந்து நீங்கள் சென்றாலும்
விண்ணுலகில் சாந்தி பெற வேண்டுகிறேன்.

சத்தியத்தின் நித்தியத்தை
பத்திரமாய் தந்த தந்தை
வித்தாகி போனதனால்
பித்தாகிப் போனேன் நான்
கத்துக் கடல் போலே தான்
இரையுதப்பா என் இதயம்
சுற்றம் தவிக்கிறதே நித்தம்,
அச்சத்தம் வலிக்கிறதே என்னுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகனாய் நான் இருக்க
மடியில் தாலாட்டித் தூங்கவைத்தாய்
வளர்ந்தவனாய் நான் வரவே
உன் தோள் சுமந்து அன்புசெய்தாய்
புத்தகமும் பொம்மைகளும் அன்று
புன்னகையோடு வாங்கித்தந்தாய்
புதுப் பொலிவு நான் பெறவே
பொக்கிஷமாய் என்னை வளர்த்தாய்

என் கல்விப் பாதை வளர்ச்சியிலே
கருத்துடனே உழைத்தீர் அப்பா
புலமைப்பரிசில் பரீட்சையில் தேறியதை
பூரித்தே மகிழ்ந்தீர்கள் அப்பா
சாதாரண தரப் பரீட்சையில் முடிவு கண்டு
சாதனையாய் திளைத்தவரே
உயர்தர முடிவு காணமுன்னே
உலகை விட்டுப் போனீரே அப்பா!

**ச.மேருகாசன் (மகன்)**

**"ஒரு தந்தையின் கண்ணீரும் பயமும் கண்ணுக்குத் தெரிவதில்லை, தந்தையின் அன்பு வெளிப்படுத்தப்படாதது, ஆனால் அவருடைய கவனிப்பும் பாதுகாப்பும் வலிமையின் தூணாக நம் வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது"**

**ஆமா எச்.வன்னியாராச்சி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழலாய் நின்றவரே!

நிழலாய் எமைக் காத்து -எம்
நிஜங்களில் பூத்தவரே!
எங்கள் கல்வியின் ஏணியாய்
என்றும் நின்றவரே!
"பல்கலைக்கழக வாசல் உங்களை
வரவேற்க வேண்டும்"- இது
அன்று நீங்கள் சொன்ன
அன்புக் கட்டளை மட்டுமல்ல...
எங்கள் வாழ்வின் ஒற்றை இலக்கு!
உடல் மறைந்தாலும் - உங்கள்
உயரிய எண்ணம் மறையாது!
கண்ணீர் துளிகளை
காகித மையாய் மாற்றுவோம்...
நீங்கள் கண்ட கனவை
நிச்சயம் நனவாக்குவோம்!
பட்டமளிப்பு விழாவில்
உடல் உருவில் நீங்கள் இல்லையென்றாலும்,
எங்கள் வெற்றிக் புன்னகையில்
நிச்சயம் வாழ்வீர்கள் பெரியப்பா!
எங்கள் அறிவெனும் நிலத்தில்
ஒரு பெரிய கனவை!
"பல்கலைக்கழகக் கோபுரம்"- அது
வெறும் கட்டிடம் அல்ல,
எங்கள் பரம்பரைக்கு நீங்கள் காட்டிய
வெற்றியின் அடையாளம்!
நீங்கள் இல்லாத வெற்றி விழா - எம்
கண்களுக்குச் சற்று பாரம்தான்...
இருந்தாலும்,
வானிலிருந்து நீங்கள் பார்க்கும் போது
உங்கள் முகத்தில் புன்னகை பூக்கும்!
அந்தப் புன்னகைக்காகவே
நாங்கள் சிகரம் தொடுவோம்

பேராமக்கள்
ஹர்ஷவர்தன்
தரண்யஹர்ஷா
பிருத்திவ்வாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன் பாதமதில் சீலன் நித்திலமானான்

சத்தியசீலன் நித்தியத்துக்குள் நித்திரை
எத்திரை போட்டாலும் மனத்திரையில் - அவன்
மாத்திரை கூட முத்திரையாச்சு
திருவாதிரையில் உன் திரை மூடியதேனோ

உடையார் பரம்பரையில் உதித்தவன்
உற்றவரை மதிப்பில் மகானும் - நீ
ஊருக்காய் உழைத்ததில் உத்தமனும் - நீ
பாருக்காய் இன்றி பிரமனவன் பாதமானாயோ

வேளாளர் குடியின் வெள்ளைத் தலைவனாய்
கண்ணகை ஆலயத்தின் அறங்காவலனாய்
புறம் பேசாது புத்தியுடன் நீ இருப்பாய்
கலங்குதையா மனசு காக்கவில்லை - கற்புக்கரசு

தடம்மாற அரசியலில் புடம் போட்டவன் - நீ
தடம்மாறும் மனிதர்க்கு தடையுன் செயலாலோ
படைகள் வந்தாலும் எடைபோடாத - தலைவன்
கொண்ட கொள்கை கண்டு கொண்டவனும் வியப்பான்

ம.தெ.எ.பற்றின் தவிசாளராய் மகுடம் நீ சூடி
தங்கமகனாய் இருந்து எருவிலை மங்கலமாக்கினாய்
உன் கனம் தெரியாது பறித்தானே பரமனவன்
வீடுபேறு நீ பெற்று விண்ணவர்க்கு மன்னவனாய் இருக்கப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினராய்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**மா.சுந்தரலிங்கம்**
**(தலைவர்)**
**எருவில்**
**கண்ணகை அம்மன்**
**ஆலயம்**
**பரிபாலன சபை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவும் அருளும் உடைய
# திருநாவுக்கரசு - சத்தியசீலன் (JP)

இயற்கை எழில் கொஞ்சும் எருவிலூராம் பதியில் சீரோடும் புகழோடும் வாழ்ந்திருந்த திருநாவுக்கரசு தங்கமலர் தம்பதிகளின் தங்கத் திருமகனாய் 1957இல் அவனிதனில் அவதரித்து குறுகுறு நடந்து மழலை மொழி பேசி, கல்வி பயின்று பெரியவனாகி, தனது தந்தை இறப்பிற்குப் பின் குடும்பப் பொறுப்பை ஏற்று சகோதரர்களை வழிப்படுத்தியவர் அமரர் திருநாவுக்கரசு சத்தியசீலன் அண்ணன் அவர்கள்.

இவர் இளமைக்காலம் தொட்டு சமூக சேவையிலும் ஆலயத் தொண்டுகளிலும் அதிக ஆர்வமுடையவராக விளங்கினார். இவர் சோமசுந்தரம் உடையாரின் புதல்வர்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் SU.எதிர்மன்னசிங்கம், SU.தம்பிராசா மற்றும் SU.ஐயாத்துரை SU.திருநாவுக்கரசு ஆகியோரின் வரிசையில், இளைய மகன் திருநாவுக்கரசு அவர்களுக்குத் திருமகனாக அவதரித்தார்.

இவர் அரசியலில் கொண்ட கொள்கை மாறாத கொள்கைவாதியாக இறுதிவரை பயணித்த பண்புமிக்க அரசியல்வாதியாகத் திகழ்ந்தார். அந்த அரசியல் வாழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டி உப தவிசாளராகவும், பின்பு தவிசாளராகவும் இருந்து எமது கிராமத்திற்கும் பிரதேசத்திற்கும் பல சேவைகள் புரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எமது அருள்மிகு ஸ்ரீ புளியடிப் பிள்ளையார் ஆலய நிருவாகத்தில் நீண்ட காலம் உபதலைவராகவும் பின்பு ஆலய நிருவாகத் தலைவராகவும் தலைமைப் பொறுப்பை ஏற்று மிகவும் சிறப்பான முறையில் ஆலயத்தை வழிநடத்திய பெருமகன்.பின் இவ்வாலய பரிபாலன சபையின் ஆலோசகராக இருந்து இறுதிவரை பணிகளைச் செய்து வந்தார். இவ்வாலய உபதலைவராக இருந்த காலத்தில் இவரது குடும்பம் சார்ந்து 2010ம் ஆண்டு நடந்த கும்பாபிஷேகத்தின் போது தனது தாய் தந்தையின் நினைவாக நவக்கிரக கோவிலை அமைத்தார். அதில் ஞாபகார்த்த உபயக்கல் பொறிக்கப்படாமல் இருந்தது. அதனை கடந்த 2025ம் ஆண்டு நடந்த கும்பாபிஷேக நிகழ்விற்கு முன்பாக அதனைப் பொறிப்பதற்கு முயற்சி எடுத்து நிறைவேற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த கிரக சாந்தி கோவிலுக்கு அவரது குடும்பம் சார்ந்து வருணம் பூசுவதற்கு நிதியுதவியினை அவரது தலைமையில் வாரி வழங்கினார்.

இவர் தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் எருவில் கிராமம் சார்ந்த நிருவாக சபை உறுப்பினராக என்னுடன் சில ஆண்டுகள் இருந்து அறப்பணியாற்றிய பெருமைக்குரியவர். எருவில் அருள்மிகு ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயத்தில் நீண்ட காலம் நிருவாக சபை உறுப்பினராகவும், வேளாளர் குடிமக்களின் ஏகோபித்த குடித் தலைவராகவும் திகழ்ந்து, அக்குடி மக்கள் அனைவரையும் கட்டிக் காத்து ஒரு குடையின் கீழ் கண்ணகைத் தாயாரின் ஆலயத்தில் ஆண்டுதோறும் இடம்பெறுகின்ற திருச்சடங்கினை சிறப்புறச் செய்து வரும் குடிமக்களின் உன்னத தலைவரும் நிருவாக சபை உறுப்பினருமாவார்.

இவர் தனது திருமண பந்தத்தை திருப்பழுகாமம் என்னும் பதியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான வனகேஸ்வரியைக் கரம்பிடித்து நலமாக வாழ்கையில் மேருகாசன் என்னும் மகனைப் பெற்றெடுத்து இன்புற்று வரும் வேளையில் “**தந்தை மகற்கு ஆற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்**” என்ற குறளுக்கமைய செல்வத்துள் மேலான செல்வமாம் கல்விச் செல்வத்தை அவன் அடைய பெரும் ஊக்கத்தையும் ஒத்துழைப்பையும் வழங்கிய பெருமை மிக்க தந்தை எங்கள் அண்ணன், திருவள்ளுவரின் “மகன் தந்தைக்கு ஆற்றும் நன்றி இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல்” என்ற திருவாக்கிற்கிணங்க அப்படியொரு மகனைப் பெற்ற பெருமையும் காலம் உள்ளவரை இவரைச் சாரும் என்பதில் ஐயமில்லை. சிவனவன் உன்னைத் தன்னகத்தே அணைத்துக் கொண்டாலும், உன் மகனின் அருமை பெருமையினையும், உயர்வினையும் உன் ஆத்மா என்றென்றும் கண்டுகளித்து வாழ்த்திக் கொண்டேயிருக்கும் என்பதை மட்டும் உறுதியாகக் கூறுகின்றேன்.

எருவில் அருள்மிகு ஸ்ரீ புளியடிப் பிள்ளையார் ஆலயத்தில் 2025.11.21ம் திகதி தொடக்கம் 2025.12.04ம் திகதி வரை இடம்பெற்ற கருமாரம்பக் கிரியைகள் தொட்டு தொடராக இடம்பெற்ற கும்பாபிஷேகம் தொடக்கம் சங்காபிஷேகம் வரையான அனைத்துப் பூசைகளிலும் கலந்து கொண்டு அரும்பணியாற்றியவர் என்பதும் நினைவுகூரத்தக்கது.

திருவாதிரை தீர்த்த உற்சவ தினத்தன்று அதிகாலைப் பொழுதில் ஆலய தரிசனம் செய்து, அங்கு இடம்பெற்ற சிவனின் அருட்பாடல்களான திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம் பாடல்களைத் தனது செவியூடாக உற்றுணர்ந்து இன்புற்று மனநிறைவு பெற்றதுடன், இறுதியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை சயன நிலைக்குக் கொண்டு செல்கின்ற அந்தத் திருப்பொன்னூஞ்சல் பாடலை எனது வாழ்க்கைத்துணையார் பாடிக் கொண்டிருந்தபோது. அதனை முற்றாகக் கேட்டு பக்தியுடன் ரசித்து அவரையும் இறுதியாக வாழ்த்தியதோடு இன்முகத்துடன் எம்பெருமானின் பிரசாதங்கள் பெற்று இல்லம் சென்றார்.

இதன் பின்னர் இவரது மரணச் செய்தி கேட்டுப் பெரும் கவலையுற்ற போதிலும், இத்திருவாதிரை நன்னாளிலேயே இறைபதம் அடையக் கொடுத்து வைத்த புண்ணியவான் எங்கள் அண்ணன் என்ற மனமகிழ்ச்சியுடன் இத்தனை சிறப்புகளும் ஒரு சேர வாழ்ந்த அன்னாரது பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கும் அவரது மனைவி, மகன், சகோதரர்கள், மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பிலும் ஆலய அறங்காவலர் சபைகள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மா மோட்ச ஈடேற்றம் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆறுதல் பெறுவோம்.

**"மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க**
**தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க**
**பூதங்கள் ஐந்தினுள் பொன்னுடல் சேர்க**
**போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க"**

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**இவ்வண்ணம்,**
**திரு. பொன். அருள்ராஜா**
**(ஓய்வு நிலை கிராம**
**உத்தியோகத்தர்)**
**எருவில் ஸ்ரீ புளியடிப்**
**பிள்ளையார் ஆலய பரிபாலன**
**சபைத் தலைவர்,**
**எருவில் ஸ்ரீ கண்ணகையம்மன்**
**ஆலய பரிபாலன சபைச்**
**செயலாளர்,**
**தாந்தாமலை ஸ்ரீ முருகன்**
**ஆலய பரிபாலன சபை உப**
**தலைவர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபதமடைந்த சமூக சேவகர்
# அமரர் திரு.தி.சத்தியசீலன் அவர்கள்

எமது SWO அமைப்பின் 2025.12.31ஆம் திகதி நடைபெற்ற வருட இறுதிக் கூட்டத்துடன் எமது அமைப்புக்கு விடை கொடுத்து இறுதிப்பதிவையும் பதிந்துவிட்டு பிரிந்த அமரர் திரு.தி.சத்தியசீலன் அவர்களின் கடந்தகாலப் பணிகளை எண்ணிப்பார்க்கும் போது இவ் அமைப்பின் வளர்ச்சியில் சிறந்த பங்காளருள் ஒருவன் என்பதில் ஐயமில்லை.

எமது அமைப்பில் ஆரம்ப காலத்திலிருந்து நிருவாக உறுப்பினராக வெளிக்கள உத்தியோகஸ்தராகப் பணியாற்றி செயல் புரிந்து, எவரின் வெறுப்பையும் காணாத ஒருவர்.வீண்வார்த்தைகள் பேசி தன்னை உயர்த்திக்கொள்வதை என்றும் வெறுத்தவர். உண்மையின் பக்கமும், உயர்வின் பக்கமும் என்றும் துணை நின்று சமூகப்பணிகளை முன்னெடுத்த அவரின் உழைப்பு எங்களின் வளர்ச்சிக்கு உந்துதல் அளித்த அந்த நாட்களை எண்ணிப்பார்க்கும் போது எமது நிறுவனம் மிகுந்த கவலை கொள்கின்றது.

மக்களுக்குச் சேவை செய்த அவ் நல்லுள்ளத்தின் ஆத்மா இறைவனின் செந்தாமரைப் பாதங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

இவரின் மறைவு எமது நிறுவனத்திற்கு மட்டுமல்ல, இவரது குடும்பத்துக்கும் பேரிழப்பு. இவரது குடும்பம் இந்த இழப்பில் இருந்து மீட்சி பெறவும், கவலைகளை மறப்பதற்கும் ஆண்டவன் அதற்குரிய ஆறுதலையும், பலத்தையும் வழங்குவார்.

ஓம் சாந்தி சாந்தி!

**இவ்வண்ணம்,**
**நிருவாகிகள் சார்பாக,**
**க.சற்குணேஸ்வரன் (ஸ்தாபகர்),**
**சமூக நலன்புரி அமைப்பு (SWO)**
**மாவட்ட காரியாலயம்,**
**புதுக்குடியிருப்பு,**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு சொல்லும் ஒருவன்

அமரத்துவம் அடைந்த திருநாவுக்கரசு மனைவி தங்கமலர் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் அமரர் திருநாவுக்கரசு சத்தியசீலன் அவர்கள். இவர் எனக்கு தம்பி முறையானவர் இவருக்கு மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரனும் உடன் பிறந்தவர்கள். இவர் தந்தை சோமசுந்தரம் மனைவி கற்பகம் தம்பதிகளுக்கு பிறந்த 04 பிள்ளைகளில் கடைசி மகனாகப் பிறந்து வாழும் பொழுது கல்லோயா அபிவிருத்தி சபையிலே நல்ல தொழில் ஒன்றை செய்து கொண்டிருந்தவர் இறந்துவிட்டார்.

இவ் வேளையில் இந்தக் குடும்பத்தைக் கொண்டு வழிநடத்தும் பெரும் பொறுப்பு சத்தியசீலனைச் சார்ந்ததால் தான் கற்ற கல்வியை இடைநிறுத்தி தொழில் ஒன்று தேடும் போது பழுகாமத்தைச் சேர்ந்த கந்தப்பர் சற்குணேஸ்வரன் என்பவர் லண்டன் மாநகரிலே வசதி படைத்த ஒருவராக வாழ்ந்து கொண்டிருந்தார். தனது பணம் தனக்கும் தனது குடும்பத்திற்கும் மட்டுமல்லாமல் எல்லோருக்கும் பயன் பெற வேண்டும் என்னும் நல்ல எண்ணம் உருவானதால் சமூக நலன்புரி அமைப்பொன்றை இங்குள்ள புத்திஜீவிகளின் உதவியோடு அமைத்து ஏழைகளுக்கும், பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும், கல்விகற்கும் பிள்ளைகளுக்கும் சிறந்த பல சேவைகளைச் செய்து கொண்டிருந்தார் யாரோ ஒருவரின் உதவியுடன் வெளிக்கள உதவியாளராக இணைந்தார். இவரது நல்ல செயற்பாடுகளினால் இவரை ஸ்தாபகர் அவர்கள் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நடத்தி வந்தார்.

இந்த வேளை தனது குடும்ப வாழ்வாதாரத்தோடு சகோதரிகளுக்கு நல்ல கணவன்மாரை திருமணம் செய்து கொடுத்து அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் முடித்து தானும் பழுகாமத்தைச் சேர்ந்த வனகேஸ்வரி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களைத் திருமணம் செய்து ஆசைக்கோ ஆஸ்த்திக்கோர் ஆண் பிள்ளையைப் பெற்றெடுத்து அவரை பொறியியலாளராக வர வாய்ப்பேற்படும் வரை கற்பித்து மரணித்தவர் இவர்.

எருவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும், சனசமூக நிலையத்தின் தலைவராகவும் பதவி வகித்து கிராமத்தின் அபிவிருத்திக்காகவும், ஏழைகளுக்கு கிடைக்க வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்பவராகவும் வாழ்ந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.தெ.எ.பற்று பிரதேச சபையில் எருவில் கிராமத்தின் பிரதேச சபை வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று சபையின் தவிசாளராகவும் பதவி வகித்து தனது கிராமத்திற்காகவும் பிரதேசத்திற்காகவும் பல சேவைகளைச் செய்தவர்.

எருவில் கிராமத்தில் வாழ்ந்த முன்னோர்களால் வகுத்து வைக்கப்பட்ட குடி மரபின்படி இவர் வேளாளர் குடியினைச் சேர்ந்தவர். வேளாளர் குடியினைச் சேர்ந்த மக்களின் தலைவராக அவர்களால் தெரிவு செய்யப்பட்டு, தனது குடியின் ஒற்றுமைக்காகவும் வளர்ச்சிக்காகவும் வாழ்ந்தவர். இறை வழிபாட்டிலே ஈடுபாடு கொண்ட இவர் எருவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையில் (15 குடிமக்களின் தலைவர்களைக் கொண்ட சபை) வேளாளர் குடியின் தலைவராக இருந்து சிறப்பாகச் செயற்பட்ட ஒருவர். புளியடி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் தலைவராக பதவி வகித்து பக்தர்களின் இறைவழிபாட்டுக்கு மறக்க முடியாத பல திருப்பணிகளைச் செய்தவர்.

செட்டிபாளையத்தில் பெற்றோரை இழந்த, கல்வி கற்பதற்கு வசதி இல்லாத பிள்ளைகளுக்கும், தங்களது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாத யுவதிகளுக்கும் கற்பதற்கும் வாழ்வதற்கும் புகலிடம் கொடுப்பதற்காக செட்டிபாளையம் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையினால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு குருக்கள்மடத்தைச் சேர்ந்த S.தவராசா அவர்களை தலைவராகவும், செட்டிபாளையத்தைச் சேர்ந்த திரு.சா.பரமானந்தம் அவர்களை செயலாளராகவும் கொண்ட குழுவினருடன் ஓர் உறுப்பினராகச் செயற்பட்டு, சமூக நலன்புரி அமைப்பின் ஸ்தாபகரான திரு. சற்குணேஸ்வரன் அவர்களோடு அடிக்கடி தொடர்பு கொண்டு கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கும் யுவதிகள் தங்குவதற்கும் வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த ஒருவர். இவ்வாறான பல சிறந்த சேவைகளைச் செய்து அமரத்துவம் அடைந்த அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சா.பரமானந்தம்**
**ஓய்வு நிலை**
**அதிபர்.**
**செட்டிபாளையம்**
**2026.02.02**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மைத்துனர்

எருவில் கிராமத்தில் வாழ்ந்த அமரத்துவம் அடைந்த சோமசுந்தரம் உடையார் கற்பகம் தம்பதிகளுக்கு மக்களாகப் பிறந்த அமரத்துவம் அடைந்தவர்களான Su. எதிர்மன்னசிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), Su.தம்பிராசா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பட்டிருப்புத் தொகுதி), S.ஐயாத்துரை (ம.தெ.எ.பற்று பலநோக்கு கூட்டுறவு சமாச பொது முகாமையாளர்), S.திருநாவுக்கரசு ஆகியவர்களில் திருநாவுக்கரசு என்பவருக்கு மகனாகப் பிறந்தவர் தான் அமரத்துவம் அடைந்த சத்தியசீலன் அவர்கள். இவர் தனது 69ஆவது வயதில் இயற்கை மரணம் அடைந்தாலும் சமூக, அரசியல் செயற்பாடுகளை தனது கிராமத்திற்கு மட்டுமல்லாமல் இப்பிரதேசத்திற்கு சிறப்பாக செய்து வாழ்ந்த ஒருவர்.

தனது தந்தையின் மரணத்திற்குப் பின்னர் தனது உடன் பிறந்த மூன்று சகோதரிகளையும் சகோதரனையும் வாழவைக்க வேண்டிய பெரும் பொறுப்பு தனக்கிருந்த காரணத்தினால் தனது படிப்பை இடை நடுவில் விட்டு பழுகாமத்தைச் சேர்ந்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட சமூக நலன்புரி அமைப்பில் வெளிக்கள உத்தியோகத்தராக தொழில் புரிந்தவர். திறமை நம்பிக்கை முதலிய நல்ல குணங்களினால் அவர்களுடைய நம்பிக்கைக்குரியவராகச் செயற்பட்டார். இவர் பழுகாமத்தைச் சேர்ந்த வனகேஸ்வரி என்ற பெண்ணை (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) திருமணம் செய்து ஆஸ்திக்கும் ஆசைக்கும் ஓர் ஆண் மகனை பெற்றெடுத்து வளர்த்து கல்வி ஊட்டி, க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது திறமை சித்திகளைப் பெற வைத்து, க.பொ.த உயர்தரம் பொறியியல் பிரிவிலே கற்பித்து பெறுபேறு வருவதற்கு முன்னர் மரணம் அடைந்து விட்டார். இவ்வாறு தனது சகோதரர்களுக்காகவும் மனைவிக்காகவும் ஒரே மகனுக்காகவும் அர்ப்பணிப்போடு பணிசெய்து வாழ்ந்தவர்.

எருவில் கிராமத்தில் உள்ள பாரம்பரியமான குடிகளுள் ஒன்றான வேளாளர் குடிமக்களின் தலைவராக இருந்து, அக்குடி மக்களின் நன்மை, தீமைகளில் பங்கு கொண்டு வழிநடத்தும் சிறந்த தலைவராக வாழ்ந்தவர். எருவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையில் வேளாளர் குடிமக்களின் தலைவராக இருந்து குடிமக்களின் கௌரவத்தைப் பாதுகாத்தவர். கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையினருக்கு சிறந்த ஒத்துழைப்புகளை வழங்கியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியடி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் தலைவராகச் செயற்பட்டு ஆலயத்தின் வளர்ச்சிக்காக பக்தர்களின் வழிபாட்டுக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டவர். தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்திலும் எருவில் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையின் குடி சார்ந்த தலைவர்களில் ஒருவராகச் செயற்பட்டு எருவில் கிராமத்திற்கு பெருமை தேடிக் கொடுத்தவர்.

எருவில் கிராமத்தில் உள்ள சமூக மட்ட அமைப்புகளில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமர்ந்து கிராமத்தின் அபிவிருத்திக்காகச் செயற்பட்டதுடன் ஏனைய அமைப்புகளில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு ஊக்கம், ஒத்துழைப்புக் கொடுத்து அவர்கள் திறம்படச் செயற்பட வழிப்படுத்தியவர்.

தன்னுடைய தந்தையின் சகோதரர்களான அமரத்துவம் அடைந்த Su.எதிர்மன்னசிங்கம், Su.தம்பிராசா ஆகியோர் அரசியலில் ஈடுபட்டு பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகி மக்களுக்கு சேவை செய்தது போல தானும் அரசியலில் ஈடுபட்டு செயற்பட வேண்டுமென விரும்பி ம.தெ.எ.பற்று பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராகி பின்னர் தவிசாளராகவும் பதவி வகித்து இப்பிரதேச மக்களுக்கு சிறந்த சேவைகளைச் செய்தவர்.

இவ்வாறு இவர் தனது வாழ்க்கைக் காலத்தில் சமய சமூக அரசியல் செயற்பாடுகளில் சிறப்பாகச் செயற்பட்டு கடந்த 2026.01.03ம் திகதி அமரத்துவம் அடைந்தவர். அன்னாரின் 31ம் நாள் கிரியை நடைபெறும் இன்றைய நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.ச.பேரின்பநாயகம் JP**
**முன்னாள் திடீர்மரண விசாரணை அதிகாரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிக்கோர் அஞ்சலி

அமரர் திருநாவுக்கரசு சத்தியசீலன் எனது ஒன்றுவிட்ட சகோதரன். எனது சித்தப்பாவின் மகன் எனது வளர்ப்புத் தந்தை அமரர் எஸ்.யூ.எதிர்மன்னசிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர்) அவர்களின் சகோதரர் அரசு குஞ்சப்பா சோ.திருநாவுக்கரசு அவர்களின் மூத்த மகன் நான் வம்சாவளியினை, பரம்பரையைப் பெரிதாக சிந்திப்பதோ அல்லது எமக்கு பெருமை கொள்வதற்கோ பயன்படுத்துவதில்லை. எனினும் இவ்விடத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும் போலுள்ளது. தம்பி சத்தியசீலனின் தந்தை அமரர் திருநாவுக்கரசு எனது தாயின் மாமா சோமசுந்தரம் உடையார் அவர்களின் இளையமகன் உடையார் வம்சத்தினர். சத்தியசீலனின் தந்தை ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்று இள வயதிலேயே அரசு தொழிலில் இணைந்தவர். அவரின் கவனயீனத்தால் அரச தொழிலை இழந்துவிட்டார். அவர் மரணிக்கும் போது அவரது பிள்ளைகள் மிகச் சிறு வயதினர். வாழ்க்கையில் சில இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. எனினும் தம்பி சத்தியசீலன் சிரமத்திற்கு மத்தியிலும் தனது கல்வியைக் கைவிடவில்லை. அதேபோன்று தனது சகோதரனைக் கல்வி கற்க வைத்து தனது சகோதரிகளையும் உரிய முறையில் ஆளாக்கி தனது குடும்பத்தை நன்னிலைக்கு உயர்த்திய தியாகி அமரர் சத்தியசீலன் சிறந்த சமூகசேவையாளன். நேரம் காலம் பாராது சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்ட ஒருவர். எருவில் கிராமத்தின் முன்னேற்றத்தில் மிக அக்கறையுடன் செயற்பட்டவர். பரம்பரைத்தன்மை எதுவோ சத்தியசீலனும் தன் முன்னோர் வழி அரசியல் சார்ந்த செயற்பாடு மிக்கவராகத் திகழ்ந்தார். எனக்கும் அவருக்குமிடையே கொள்கை முரண்பாடுகள் காணப்பட்டாலும் அவர்சார்ந்த அரசியலைப் பயன்படுத்தி சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றியுள்ளார். இவர் மண்முனை தென் எருவில்பற்று தவிசாளராக பதவி வகித்த காலத்தில் பிரதேசத்திற்கும் எருவில் கிராமத்திற்கும் குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றியுள்ளார்.

குடும்பப் பொறுப்பு, சமூகசேவை இவற்றுடன் ஆன்மீகத் துறையிலும் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். எருவில் புளியடிப்பிள்ளையார் ஆலயத்தின் தலைவராக (வண்ணக்கர்) இருந்து அவ் ஆலயத்தின் உயர்ச்சியில் முக்கியமான பங்காற்றிச் செயற்பட்டார். இவர் இறையடி சேர்ந்த தினம் அன்று காலையில் சுகதேகியாக புளியடிப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று வணங்கி வந்துள்ளார். தன் கிராமத்தவருடனும், தனது உறவுகளுடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் நற்பண்பு கொண்டவர். அமரர் சத்தியசீலனின் நல்லுள்ளத்தின் பயன் அவர் நோய்வாய்ப்பட்டு சிரமப்படாது அமைதியாக அவர் உயிர் பிரிந்துள்ளது. தம்பி சத்தியசீலனின் நற்பண்புக் கேற்ப அவரது அன்பு மனைவி சுகம் பெறுவதோடு, அவரின் மகனின் எதிர்காலம் சிறந்ததாக அமைய வேண்டும். இவரின் பிரிவால் துயருறும் அவரது அன்பு மனைவி, மகன் உடன்பிறப்புக்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிராத்திக்கின்றேன்.

**கனகரெத்தினம் துரைராஜா JP**
**ஓய்வு நிலை அதிபர்**
**அரச சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை**
**நிதிய மட்டக்களப்பு மாவட்ட தலைவர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

எருவில் கிராமத்தில் கடந்த 1957.01.14ம் திகதி பிறந்து வளர்ந்த அமரர் திருநாவுக்கரசு சத்தியசீலன் அவர்கள் அக்கால அரசியல் பின்னணி கொண்ட புகழ் பூத்த உயர் குடும்பத்தில் பிறந்த பெருமகன். அவரது மரணம் 2026.01.04 அன்று அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன். அவர் எனது நெருங்கிய உறவினர். அவரது தந்தையார் பட்டிருப்பு தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த S.U.எதிர்மன்னசிங்கம், S.U.தம்பிராசா அவர்களின் இளைய சகோதரன் புத்திரர். இவர் தனது இளமைக்காலத்தில் ஆரம்பக் கல்வியினை எருவில் கண்ணகி வித்யாலயத்திலும் தனது உயர் கல்வியினை பட்டிருப்பு மத்திய மாகாவித்தியாலயத்திலும் பயின்று தனது குடும்ப நிலமை காரணமாக உயர்கல்வினை தொடரமுடியாமல் தந்தையின் மறைவினை அடுத்து சகோதரிகளையும் சகோதரனையும் சிறந்த கல்வி கேள்விகளை புகட்டுவதற்கு தக்க வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார்.

இருப்பினும் இவர் வாழ்ந்த கிராமத்தில் தனது பெரியப்பாவான S.U.எதிர்மன்னசிங்கம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் சேவையினையும் அவரது பெருமைகளையும் அவரது மைந்தன் போல எடுத்தியம்பியவர். என்றால் மிகையாகாது இவர் வாழ்ந்த காலத்தில் எருவில் புளியடிப் பிள்ளையார் ஆலயத்தின் தலைவராகவும், எருவில் கண்ணகையம்மன் ஆலயத்தில் வேளாளர் குடி மக்களின் உப தலைவராகவும், எருவில் கிராம அபிவிருத்திச் சங்கம், சன சமூக நிலையங்களின் நிருவாகியாகவும் இருந்து செயற்பட்டு வந்தார்.

**"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்"**

என்ற குறளுக்கு இணங்க வாழ்ந்து காட்டியவர். கடந்த 1994ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். அப்பொழுதே ஆயுத கலாசாரம் நிறைந்த காலத்தில் ஐக்கிய தேசிய கட்சியில் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளராக இருந்து வந்தார். கதி இழக்கிலும் கட்டுரை இழக்கிலேன் என்ற கொள்கையுடன் இருக்கும் வரையும் செயற்பட்டு வந்தவர். இப்பொழுதுதான் எம் மக்கள் தேசிய கட்சிகளுடன் பயணிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அப்பொழுதே அதனை உணர்ந்து உயிர் அர்ப்பணித்தலுக்கு மத்தியில் செயற்பட்டவர். பின்பு 1997ல் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டு செயற்பட்டு வந்தார். அப்பொழுது அவர் கட்சியில் இல்லை.

2001ம் ஆண்டிலிருந்து சமூக நலன்புரி அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தராக இருந்து S.W.O தன் ஆர்வத்துடன் ஏழை எளிய மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வரும் வேளையில் திருப்பழுகாமத்தைச் சேர்ந்த வனகேஸ்வரி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களை கரம் பிடித்து இல்லற வாழ்வில் இணைந்து அதன் பேறாக மகனைப் பெற்றெடுத்து அவரை வளர்த்து கல்வி கேள்விகளில் வல்லவராக உருவாக்குவதில் பெரும்பாடுபட்டார். அவரது க.பொ.த உயர்தர பெறுபேறு கணித பிரிவில் வருவதற்கு முன்பு அவர் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.

இவரது வாழ்க்கையில் தனக்காக வாழாது எப்பொழுதும் பிறருக்காக வாழ்ந்தவர் சத்தியசீலன் என்றால் மிகையாகாது. அவருக்கும் மகிழூர் கிராம மக்களுக்கும் நெருக்கமான உறவினை உடையவர். அவர்களது வீட்டில் அக்காலங்களில் அடிக்கடி வருவார் அவரை நாங்கள் மாமா என்றே அழைப்போம். இன உணர்விலும் உறவுகளை கண்டு அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்பதில் இவருக்கு நிகராக எவருமில்லை.

எனவே பிறப்பவர் இறப்பதும் இறப்பவர் பிறப்பதும் இயற்கையின் நியதி அந்த வகையில் இறைபாதமடைந்த சத்தியசீலன் மாமாவின் பிரிவால் துயருறும் மனைவி, மகன், சகோதரர்கள், சுற்றத்தினர். அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**இ. விவேகானந்தராசா L.L.B**
**மகிழூர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணிகள் பல புரிந்து சாதனைகள் பல படைத்த தன்னிகரில்லாத் தலைவன்

சைவமும் தமிழும் தலைசிறந்து விளங்கும் எருவில் கிராமத்தில் சைவ வேளாளர் குடும்பத்தில் திருநாவுக்கரசு தங்கமலர் தம்பதியினருக்கு அன்பு மகனாகப் பிறந்தவர் அமரர் சத்தியசீலன் J.P அவர்கள்.

பாடசாலைப்படிப்பிலும் சக மாணவர்களுக்கு முன்மாதிரியாகக் கற்றலில் ஈடுபட்டார். இதன் பயனாக மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளராக, புளியடிப் பிள்ளையார் ஆலய அறக்காவலர் சபைத் தலைவராக, வேளாளர் குடித்தலைவராக, சமூக நலன்புரி அமைப்பு S.W.O வெளிக்கள உத்தியோகஸ்தராக, கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராக தொண்டாற்றியவர்.

2001ம் ஆண்டிலிருந்து 31.12.2025 வரை நான் இவருடன் இன்பத்திலும் துன்பங்களிலும் பங்கெடுத்து வாழ்ந்தவன். குறிப்பாக S.W.O நிறுவனத்தின் ஆரம்ப காலத் தலைவராக இருந்த என்னுடன் பயணித்திருக்கிறார். அக்காலம் மிகவும் கஷ்டமான காலம் யுத்தம், சுனாமி அனர்த்தத்தால் துயருற்ற காலம். அவ் வேளையில் பழுகாமம் திலகவதியார் மகளிர் இல்லம், களுவாஞ்சுகுடி சக்தி இல்லம், செட்டிபாளையம் சிவன் இல்லம், வாகரை இல்லம் ஆகிய எல்லா இடங்களிலும் திறமையாகப் பணியாற்றியவர்.

இருவரும் சேர்ந்து திட்டங்களை வகுப்போம் இளையவராக இருந்தாலும் சத்தியண்ணன் என்றே அழைப்பேன் எவ்வாறு திட்டம் வகுத்தாலும் இவருடைய ஆலோசனையின்படியே செயல்படுத்துவேன். இருவரும் ஒருமித்தே பயணம் செய்வோம்.

ஒரு காலகட்டத்தில் எமது நிறுவனக் காரியாலயம் களுவாஞ்சிகுடி பிரதான பாதையில் ராஜா கட்டடத்தின் மேல் மாடியில் அமைந்திருந்தது. பணியாளருக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை. அவ்வேளையில் எமது ஸ்தாபகர் தீர்க்கதரிசி. திரு. கந்தப்பன் சற்குணேஸ்வரன் அவர்கள் அமெரிக்கா சென்ற காலம். அவ்வேளையில் பதுளையிலிருந்து நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு இருவரும் சாய்ந்தமருதில் இருந்த நிறுவனத்தின் பொருளாளரிடம் பணம் பெற்று வந்து சம்பளம் கொடுத்த காலம். மறக்க முடியாத காலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.W.O நிறுவனத்திற்குக் காணி கொள்வனவு செய்யவும், வேலி அமைக்கவும் மெய்வருத்தம் பாராமல், பசி நோக்காமல் கருமமே கண்ணாக இருந்து இல்ல வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர் மறக்க முடியாத "சீதேவி"

சுமார் 25 வருடங்களுக்கு மேலாக என்னுடன் பயணித்தவர். மறக்க முடியாத மனித மாணிக்கம் பிறப்பதும் இறப்பதும் இறைவன் நியதி இதிலிருந்து நாம் விலக முடியாது என்பதற்கு அமைய நம் வாழ்வில் நாம் நல்லதையே செய்து நற்பேறு பெறுவோமாக புளியடிப் பிள்ளையார் கண்ட சத்தியசீலன் இழப்பு எருவில் கிராம மக்கள் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

எனவே அன்னாரின் பிரிவில் துயருறும் உற்றார், உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் புளியடிப் பிள்ளையாரைத் தினமும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சோதிடர். வே.தவராசா**
**J.P சமூக சோதி**
**(S.W.O) ஆரம்பகாலத் தலைவரும்**
**தற்போதைய ஆலோசகரும்**
**குருக்கள் மடம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுகளில் சத்தியண்ணன்!

**"நெடுநல் உளனொருவன் இன்றில்லை**

**எனும் பெருமை உடைத்திவ்வுலகு"**

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கு அமைய, 'இன்றிருப்பார் நாளை இல்லை அன்று இருந்தார் இன்றில்லை' என்ற பெருமையைக் கொண்டுள்ளது இவ்வுலகம். இருப்பினும் அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் எப்போதும் எம்மை நினைவூட்டிக்கொண்டே இருக்கும். இந்தவகையில் அண்ணனின் நினைவுகளும் எம்மோடு. அவர் பிறப்பிலிருந்தே அரசியல் பின்னணியோடு இருந்தவர். சோமசுந்தரம் உடையாரின் புதல்வர்களான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான S.U.எதிர்மன்னசிங்கம், S.U.தம்பிராஜா மற்றும் S.U.ஜயாத்துரை மண்முனை தென் எருவில் பற்று கூட்டுறவு பொது முகாமையாளர் மற்றும் S.U.திருநாவுக்கரசு ஆகிய நான்கு புதல்வர்களில் கடைசி புதல்வரான திருநாவுக்கரசு அவர்களின் மூத்த மகன் அமரர் சத்தியசீலன் ஆவார். இவர் கொள்கை மாறாது நாகரீகமான முறையில் அரசியல் வாழ்கையில் இணைந்து, மற்றைய கட்சிகளையோ மற்றைய அரசியல்வாதிகளையோ தாக்காது தனது அரசியல் பணியை முன்னெடுத்துச்சென்று, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளராக பதவியேற்று, இப் பிதேசத்திற்கும், தான் பிறந்த எருவில் கிராமத்திற்கும் தன்னால் முடியுமான அபிவிருத்திப் பணிகளை செய்திருந்தார். இவர் எருவில் கிராம அபிவிருத்திசங்கத் தலைவராக இருந்து பல சவால்களை எதிர்கொண்டு கிராம அபிவிருத்தியில் மிகப்பெரிய பங்காற்றி இருந்தார்.

இவரது ஆன்மிகப் பணி, எருவில் ஸ்ரீ புளியடிப் பிள்ளயார் ஆலயத்திலே தலைவராக இருந்து மிகவும் பண்பான முறையிலே மக்களோடு உரையாடி ஆலய வளர்ச்சியிலே மிகவும் காத்திரமாகச் செயற்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமல்லாது எருவில் வேளாளர் குடி மக்களின் தலைவராக அவரது குடி மக்களால் தெரிவு செய்யப்பட்டு நீண்ட காலமாக எருவில் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நிர்வாக சபை உறுப்பினராக பணியாற்றி ஆலய வளர்ச்சியிலே இடம்பெறுகின்ற அனைத்து பணிகளிலும் தன்னாலான பங்களிப்பினை வழங்கினார்.

இவர் மனிதப் பண்புடைய இரக்க குணம் உடையவர் எப்போதும் தான் பிறந்த கிராம வளர்ச்சி கருதியே செயற்பட்டவர். எம் கிராமத்தின் பன்முக ஆளுமை கொண்ட ஒரு மனிதர். யாரையும் நோகும்படியான வார்த்தைகளை வெளியிட மாட்டார். எல்லோரிடமும் இனிமையாக உரையாடி மக்கள் மனங்களிலே இடம் பிடித்து இன்றும் மக்கள் மத்தியிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

இவரது தந்தையார் இளவயதிலே காலமான வேளையிலே சிறு வயதிலிருந்தே தனது குடும்பச் சுமையை பொறுப்பேற்று வழிநடத்தி குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டு வந்த ஒரு தலைவர். தனது அன்பான மனைவியையும் இவருக்கு ஏற்றாற்போல் இறைவன் கொடுத்தார். அவரும் இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பி மக்களோடு பழகுகின்ற நல்ல பண்புடையவர். இவரது ஒரே மகன் கல்வியிலே சிறந்து விளங்குகின்றார். இவர் மேலும் உயரத்தை அடைந்து அவரது தந்தையின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்பது எனது ஆசை. அது தந்தைக்கு மகன் செய்யும் மிகப்பெரிய கைங்கரியம் ஆகும்.

இவர் சமூக நலன்புரி அமைப்பில் (SWO) வெளிக்கள உத்தியோகத்தராக பணியாற்றிய காலப்பகுதியிலே எமது கிராமத்தில் உள்ள வறிய மாணவர்களை தேடியறிந்து அவர்களுக்கு கற்பதற்கு தேவையான உபகரணங்களையும், ஏனைய வசதிகளையும் ஏற்படுத்தி கொடுத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பங்காற்றி இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவருக்கும் எனக்கும் இடையிலான அண்ணன் தம்பி என்ற ஒரு பாச உணர்வு சிறு வயதில் இருந்தே தொடர்ந்தது. எனது வளர்ச்சியிலே மகிழ்ச்சி கண்ட ஒரு மதிப்பிற்கும், அன்பிற்கும் உரிய அண்ணனாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் என் நெஞ்சில் நிறைந்திருக்கின்றார். எனது மனைவி மக்களுடன் அன்பாக பழகி அவர்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்களை நல்வழிப்படுத்தியதில் இவருக்கும் பங்குண்டு. இவரது இழப்பானது என்னையும், என் குடும்ப உறுப்பினர்களையும் வேதனைக்குட்படுத்தியது. அண்ணன் அவர்களுடன் இறுதியாக திருவாதிரை தீர்த்தத்தில் காலை நீண்ட நேரம் உரையாடி நாளை சந்திக்கின்றேன் என்று சென்றேன். ஆனால் அவரது மரணச் செய்தி மாலை 6.30 மணியளவில் கிடைத்ததும் அதிர்ந்துபோனேன்.

அவரது மறைவு அவரது குடும்பத்தாருக்கு மிகப்பெரிய இழப்பாகும் அவரது மனைவி, மகன் மேருஹாசன் மற்றும் சகோதரர்கள் இதிலிருந்து மீண்டு வர எல்லாம் வல்ல இறைவன் தைரியத்தை கொடுக்க வேண்டும். இவரது இழப்பானது எருவில் கிராமத்துக்கும், எமது பிரதேசத்திற்கும், குறிப்பாக எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்திற்கும் மிகுந்த கவலையையும் துயரையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

இவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

**எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வண்ணக்கரும்,**
**ஓய்வுநிலை உப அதிபருமான**
**திரு.கி.குமாரசிங்கம்**
**(Bed, Dip.in.Councelling,**
**Dip.in.School Management,**
**Social Science - Trained)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருநாவுக்கரசு - சத்தியசீலன் அவர்கள் பற்றிய நினைவுகள்

கடந்த 2026.01.03 அன்று இறைபதம் அடைந்த அமரர் திருநாவுக்கரசு சத்தியசீலன் அவர்களை நான் நீண்ட காலமாக அறிவேன். நான் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் கடமையாற்ற வந்த காலப் பகுதியிலிருந்து அவர்களது குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்திருந்தது. அவரது தாய் தந்தையர், சகோதர சகோதரியர் அனைவரும் மக்களுடன் மிகவும் அன்னியோன்யமாக நட்புறவுடன் பழகும் பண்பு நிறைந்தவர்கள். சத்தியசீலன் அவர்களும் அனைவருடனும் அன்னியோன்யமாக மிகுந்த நட்புறவுடன் பழகும் பண்பும், பெரியோருக்கும், இளையோருக்கும் உரிய மதிப்பளித்து பழகும் பண்பும் நிறைந்தவர். சத்தியசீலன் அவர்களின் தந்தையார் திருநாவுக்கரசு அவர்களும், எமது நாட்டிற்கு 1948 இல் சுதந்திரம் கிடைத்த பின் முதலாவது பாராளுமன்றத்தில் பட்டிருப்பு தொகுதியின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு 1952 வரையும், பின்னர் 1956ல் இருந்து 1960 வரையும் என இரு தடவைகள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்த அமரர் சோ.உ.எதிர்மன்னசிங்கம் மற்றும் 1970 தொடக்கம் 1977 வரை பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த அமரர் சோ.உ.தம்பிராசா ஆகியோரின் இளைய சகோதரர் என்பதால் அரசியல் என்பது அவர்களது குடும்பத்துடன் பின்னிப் பிணைந்து வந்தது எனலாம். அந்த வகையில் சத்தியசீலன் அவர்களும் அரசியலில் இறங்கி பிரதேசசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு தவிசாளர் வரை உயர்வு பெற்றவர். சத்தியசீலன் அவர்கள் பதவி கிடைத்தபோதும் எந்தவிதமான பவிசோபடாடோபமோ இன்றி மிகவும் எளிமையாக மக்களோடு பழகி வாழ்ந்தவர். எவ்வித அரசியல் பேதமும் பாராது அனைத்து தரப்பினருடனும் பழகும் நற்பண்புடன் திகழ்ந்தவர். சத்தியசீலன் அவர்களது துணைவியாரும் போரதீவு பற்று பிரதேச செயலகத்தில் என்னுடன் இணைந்து பணியாற்றியவர். இயலுமானவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் பல்வேறு அமைப்புகளுடனும் ஆலயங்களுடனும் சிறந்த முறையில் உறவினைப்பேணி சேவைகளை ஆற்றி வந்துள்ள சத்தியசீலன் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்களுக்குச் சேவையாற்றியிருக்க வேண்டியவர். அவர் இங்கு ஆற்றிய சேவைகள் போதும் என்றோ என்னவோ இறைவன் அவரை திருவாதிரை நன்னாளில் தன்னுடன் இணைத்துக் கொண்டுள்ளார். அவர் மறைந்தாலும் அவர் சமூகத்துக்கு ஆற்றிய பணிகளும், அவரது உயரிய பண்புகளும் என்றென்றும் பேசப்படும் அளவுக்கு நிலைத்து நிற்கும். அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் மனைவி, மகன், சகோதர சகோதரியர், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பழனித்தம்பி குணசேகரன்**<br>
**ஓய்வுநிலை பொறியியல் உதவியாளர்**<br>
**களுதாவளை**<br>
**02.02.2026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

## திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்பது
வேதம் நான்கினும் மெய்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது நீயே

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண் மணிக்குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமயிலேறி விளையாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே

**திருச்சிற்றம்பலம்**

**பன் நாட்டுப் பழமொழிகள்**

ஒருவர் அறிவாளியாக இருந்தால் இருவர் இன்பமாக வாழலாம்

**இங்கிலாந்து**

நாய் குரைக்கும் போது நீங்கள் தாமதித்தீர்களேயானால், நீங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு செல்ல முடியாது.

**அரேபியா**

செழிப்பான பண்ணையில் இருந்து குதிரையை வாங்கு, ஏழ்மையான வீட்டில் இருந்து பெண்ணை வாங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## பாடல் — 1

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை
யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

## பாடல் — 2

பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல் நாம்
பேசும் போதெப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்

## பாடல் — 3

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்து எதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென்ற உள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்டாற் பொல்லாதே
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் ஏமக்கேலோர் எம்பாவாய்

## பாடல் — 4

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் – 5

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
எபாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்

பாடல் – 6

மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடேலோர் எம்பாவாய்

பாடல் – 7

அன்னே யிவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

பாடல் – 8

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு ஏலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் — 9

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கு அவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கு எம் கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்.

## பாடல் — 10

பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோதில் குலத்தரன் தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

## பாடல் — 11

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆரழல் போல்
செய்யா வெண்ணீறு ஆடி செல்வா சிறு மருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

## பாடல் — 12

ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார் கலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீராடேலோர் எம்பாவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் — 13

பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு ஏலோர் எம்பாவாய்.

## பாடல் — 14

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆட
சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்ந்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

## பாடல் — 15

ஓரொரு கால் எம்பெருமான் என்றென்றே
சீரொருகால் வாய் ஓவாள் நம்பெருமான்
நீரொருகால் ஓவா சித்தம் களிகூர
பாரொருகால் வந்து நெடுந்தாரை கண்பனிப்ப
அணையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வார் உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏர் உருவப்பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

## பாடல் — 16

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் — 17

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம்பாலதாக்
கொங்கு உண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம் திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

## பாடல் — 18

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர் வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகல
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடி
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

## பாடல் — 19

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ் சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எம் கொங்கை நின் அன்பரல்லா தோள் சேரற்க
எம் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கெழிலன் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.

## பாடல் — 20

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரீகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி



**பாட்டு 01**

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

**பாட்டு 02**

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணலங் கண்ணாம்
திரள் நிரை அருள்பதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லே பள்ளி எழுந்தரு ளாயே!

**பாட்டு 03**

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே!

**பாட்டு 04**

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு 05

பூதங்கள் தோறும் நின் றாய் எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே!

பாட்டு 06

பப்பற வீட்டிருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்
மைப்பறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல் சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப்பு அறுத்துஎமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

பாட்டு 07

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில்சூழ் திருஉத்தர கோச
மங்கையுள் ளாய் திருப் பெருந்துறை மன்னா
எது எமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

பாட்டு 08

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தே பள்ளி எழுந்தரு ளாயே!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாட்டு 09

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப் பொரு ளேஉன் தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய் வழி யடியோம்
கண்ணகத் தே நின்று களிதரு தேனே
கடலமு தே கரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய் உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

## பாட்டு 10

புவனியில் போய் பிற வாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவ மேஇந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தே பள்ளி எழுந்தரு ளாயே!

.............................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.
திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்றான் ஈன்றருளும் மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என் கதைக்கு நீஎன்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை.
ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் – பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.
பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன் – கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்கு
சங்கத் தமிழ்மூன்றுந் தா

## சப்பாணி

எள்ளு பொரி தேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும்,வாழைப்பழமும், பலாப்பழமும்,
வெள்ளைப்பாலும், மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.
சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி,
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே,
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்,
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல் இசை நாடகம் எனனும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்துஎன்
சிந்தத் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரி முகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால்தெளிவு றச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரி ல்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்குழர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங்கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்புஅரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கும் உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்த அந்தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில்லை என்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்குஅருள் செய்கென
எமைஆளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்நீ பிள்ளை யாகச்
சென்றுஅவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கமாமகளும்
பெடைமயிற் சாயற் பெண்மகவுஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையூஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பு இறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னை உன் மணமகனாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான் எனக்
கருந்தட நெடுங்கண் கவுரி அங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்வதச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர்சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம் என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டு நற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சை கொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செலுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர் போய்த்
தந்தைதாய் இருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்க என
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள் என
மைமலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன் என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர் கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்று இங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம்என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன் எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன் என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூசனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூரத் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவன் எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி தலைமகள் தானும்
விரைவொடுஅங்கு அவன்அடி வீழ்ந்து இறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர் கிம் புருடர் அலகை
சித்தர் தாரகை கந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில்உள் ளவரும்
மணிக்ருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவை நாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரண பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பத்திப் படர் முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்என விளங்கும் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சைஅம் பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வரும்கருங் குழலாள் மற்றும்உண் டோஎனத்
திருந்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர் மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய் விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர் விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூரியர் போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துஉடன் நோக்கி
விண்ணுளோர் களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான் அமர் கொடிய கடுவிலங் காலும்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர் அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்றுஅவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர் பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார் முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்துஅவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமு டிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்துஆங்கு உயர் படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர் முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத் தினத்திற்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர்பக்கஞ்
சதயத் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாக்கவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர் எனக் கிளத்துதள் உற்றான்
அக்குநீ றணியூம் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியற்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பினோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்து எமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
புசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவரன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணி
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர் தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கத நிருதரை வேர் அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்க்ககொடுஅர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர் முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரி உறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர் விடு மணிமுடிச் சூரனை வெல்லக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர் என
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குஉடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர் அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம்அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
தெள்ளித்திற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர் கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
ஆறுமுகக் கடவுள்அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர் என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலனும் உமையும் விடையு கைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேர் வதம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர் முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர் பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்துஇனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல் கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குற்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மாலமுகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன்அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரி அங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்
துளவு அணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர் மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர் சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரி யின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில்தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத் தோர் இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமத் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளி புனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர் பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவு பொற் கலைகள் கொடுவி தானித்து
மலர் பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன் கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர் க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர் கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர் மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர் நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உமை சாபம்இட் டதுவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர் க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரி அன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழுவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்ததஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அந்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரி முகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம்அவட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணிகட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர் பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
தூசுதாய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அங்கங்கள் தோறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார் க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பழ பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையூந் தண்ணீர் விரும்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாடடி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர் பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

.......................................

**நூற்பயன்**

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்துஅணுகும் — உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பணைக்கை முக்கண் புகார்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் — சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை — உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகுஇருந்து
கேட்டோர் க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் — மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவும் அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகளும்

நீரிழிவு என்கின்ற சக்கரை வியாதி இன்று உலகில் எப்பாகத்திலும் காணக்கூடிய பொது வியாதியாகும். கருவறை தொடக்கம் தள்ளாடும் வயது வரை வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற கொள்ளை நோயாகும். மனிதர்களை கொத்துக் கொத்தாக கொல்கின்றது. இதனால்தான் கொள்ளை நோய் என அழைக்கப்படுகின்றது.

உலக சுகாதார நிறுவன தகவலின்படி உலகில் மூன்றில் ஒருவர் உயர்குருதி அமுக்கத்தினாலும், பத்தில் ஒருவர் நீரழிவினாலும் பாதிக்கப்படுகின்றனர். 1985ல் மூன்று கோடி பேராக இருந்த நீரிழிவாளர்கள் 2014ல் 35 கோடி பேராக அதிகரித்துள்ளனர்.

இலங்கையில் மொத்தத்தில் பத்து வீதமானவர் நீரழிவு நோயினால் பாதிப்படைந்துள்ளனர். அண்மைக்கால ஆய்வின்படி நகர்ப்புறங்களில் $\frac{16}{100}$ பேரும், கிராமப் புறங்களில் $\frac{9}{100}$ பேரும் இந்நோயினால் பாதிப்படைந்துள்ளனர்.

உயிரின் மூலாதாரம் சக்தி மனிதன் தனது சக்திக்கு குளுக்கோசு எனும் அமிர்தத்தை நம்பியுள்ளனர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே. குளுக்கோசினைக் கையாளும் ஆற்றல் மங்கிப்போகும் போது உடலில் ஒவ்வொரு கலத்திலும் செயல் திறனானது மங்கிப்போய் குருதியில் குளுக்கோசு மட்டும் மிதமிஞ்சி நீரிழிவு நிலை ஏற்படுகின்றது. குளுக்கோசினைக் கையாளும் பொறிமுறை சிக்கலான பல படிமுறைகளைக் கொண்டது. பல அகச்சுரப்புக்கள், புறச்சுரப்புக்கள் மற்றும் நரம்பியல் தொழிற்பாடுகளால் இது ஆளப்படுகின்றது. ஆனாலும் இன்சுலின் என்கிற அகச்சுரப்பு (ஹோர்மோன்) பதார்த்தமானது குளுக்கோசு கையாளுகையின் அச்சாணியாகும்.

## நீரிழிவு என்றால் என்ன?

குளுக்கோசினை உயிர்கலங்களை உள்வாங்கிக் கொள்ள, இன்சுலின் கொடுக்கின்ற தூண்டுதல் அவசியமாகும். இன்சுலின் உற்பத்தி குறையும் போதோ அல்லது அதன் தொழிற்பாடு மந்தமடையும் போதோ குளுக்கோசானது கலங்களைச் சென்றடையாது குருதித் திரவத்திலேயே தேங்கிவிடுகின்றது. இதன் காரணமாக நிகழும் மாற்றங்களால் வெளிப்படும் பாதிப்புக்களும் குணங்குறிகளும் ஒருங்கு சேர்ந்து நீரிழிவு எனும் நோய் ஏற்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவின் வகைகள்

இன்சுலின் சுரப்பு மற்றும் தொழிற்படு திறன் அடிப்படையில் இரு வகைப்படும்.

1. **முதலாம் வகை நீரிழிவு நோய்** - இன்சுலின் சுரப்பு இன்மையால் அல்லது மிகுந்த பற்றாக்குறை காரணமாக ஏற்படுகின்றது. கர்ப்பத்தில் உள்ள சிசுக்கள், குழந்தைகள், பிள்ளைப்பருவம், சிலவேளை வளர்தோருக்கும் ஏற்படுகின்றது. இது புற்று நோய்க்கான சிகிச்சை, சாராயம் முதலான நச்சுகளால் கணையம் சிதைவடைகின்றது.

2. **இரண்டாம் வகை நீரழிவு நோய்** - இன்சுலின் செயற்றிறன் மங்கிப் போவது மற்றும் குறைபாடு காரணமாக ஏற்படுகின்றது. இது வளர்தோருக்கு ஏற்படுகின்றது.

## நோய்க்கான காரணிகள்

இன்சுலின் கலங்களின் மீது தொழிற்படுவதைப் பல்வேறு காரணிகள் பாதிக்கின்றன. அவையாவன.

**1. உடற்பிரயாசை :**

எமது உடலின் நுண் அமைப்பானது வியர்வை சிந்தும் கடின உழைப்பிற்கு ஏற்ற விதத்திலேயே படைக்கப்பட்டுள்ளது. சோம்பேறித்தனம் குடிகொள்ளும் போது இச்செய்முறைகள் எதிர்த்திசையில் நகர்கின்றன. இந்நிலையானது நீரழிவு, இதயநோய், பாரிசவாதம், ஞாபகமறதி, தாம்பத்ய தாகமின்மை போன்றவற்றை ஏற்படுத்துகின்றன.

**2. பரம்பரை அமைப்பு :**

நம் ஒவ்வொருவரினதும் உடற்கலங்களில் காணப்படும் பரம்பரை செய்திகளுக்கேற்ப நமக்கு நோய் நொடிகளால் ஏற்படும் தாக்கமும் வேறுபடும். சில பரம்பரை அலகுகள் நீரழிவின் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. குடும்பத்தில் ஒருவருக்கு நீரழிவு ஏற்படும் போது மற்றவருக்கும் ஏற்படுகின்றது.

**3. உடலமைப்பு :**

உடற்பருமன் அதிகரிக்கும் போது குறிப்பாக இடுப்பின் சுற்றளவு ஆண்களில் 35 அங்குலத்திலும் பெண்களில் 31.5 அங்குலத்திலும் அமையும் போது நீரழிவு நோய் ஏற்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. உணவு :**

எண்ணெய்யில் தீக்குளித்த உணவு வகைகள் உட்கொள்ளுதல், செயற்கை சுவையூட்டிகள், மணமூட்டிகள் பயன்படுத்திய உணவுகளை உட்கொள்ளுதல், சக்கரின் சேர்ந்த பேக்கரி உணவு வகைகள், போத்தலில் அடைத்த குளிர்பானங்கள், சீனியும் உப்பும் அதிகம் கலந்த உணவு வகைகள்,

இதன் காரணமாக மனஉளைச்சல், உடலில் சேரும் நச்சுப் பதார்த்தம், விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்களின் சமநிலை இழப்பு என்பனவற்றால் இன்சுலின் செயற்றிறன் படிப்படையாக பாதிப்படைகின்றது. நீரழிவு, இதயநோய்கள், நரம்பியல் நோய்கள், ஈரல் நோய்கள் ஏற்படுகின்றன.

**5. மதுசாரம் :**

அதிகளவிலான மதுபாவனை இன்சுலின் செயலாற்றை மழுங்கடிப்பதோடு ஈரலழற்சி, இதயநோய், பாரிசவாதம் எனப் பலநோய்கள் உண்டு பண்ணுகின்றது.

**6. புகைத்தல் :**

சிகரட் புகையில் காணப்படும் பல்வேறு நச்சுப்பதார்த்தங்களாலும் உடலில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. நீண்டகாலப் போக்கில் உடலில் பல செயற்பாடுகள் சீர்தன்மையை இழக்கின்றன. இன்சுலின் சுரக்கும் சதையிக் கலங்களும் இவ்வாறு குழம்பிப் போகின்றன. நீரிழிவின் ஊற்றாகவும் புகைத்தல் அமைகின்றது.

## நீரிழிவின் குணங்குறிகள்

1. அதிக குளுக்கோசு மட்டம் காரணமாக அதிக சிறுநீர் வெளியேறுதல் நீர் வரட்சி நிலை ஏற்படும்.
2. கணையத் தொழிற்பாடு சீரான வேகத்தில் குறைந்து செல்லுமாயின் தாகமிகுதி, அதிகபசி, அல்லது பசியின்மை, அதீத களைப்பு, உடல் இளைப்பு ஏற்படும்.
3. திடீரென உடல் மெலிதல், அதிக சோர்வு, காயங்கள் ஆற நாட்படுதல், அடிக்கடி சளிச்சுரம், சலக்கடுப்பு.
4. பாலுறவில் ஈடுபாடின்மை, மகப்பேறின்மை, ஆணுறுப்பு சரியாக விறைக்காமை, தலையிடி, மனச்சோர்வு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு ஏற்படுத்தும் தாக்கங்கள்

1. **சிறுநீரக தொகுதி :**
நீரிழிவு நோயாளர்களின் சிறுநீரகம் பாதிப்படைகின்றது. சிறுநீரக கலங்களில் ஏற்படும் தொழிற்பாட்டு குளறுபடிகள் சிறுநீரகத்தின் வடிதல் பொறிமுறையை பாதிக்கின்றது. இதனால் சிறுநீரில் புரதம் கழிவதில் ஆரம்பித்து இரு சிறுநீரகங்களையும் அகற்றி விட்டு சிறுநீரக மாற்று சிகிச்சை செய்ய வேண்டி வரும்.

2. **ஈரல் :**
இன்சுலின் தொழிற்பாடு மந்தமான நிலைமைகளில் ஈரற்கலங்களின் தொழிற்பாடும் மந்தமடைகின்றது.

3. **இதயம் :**
இதயத்தசையின் சுருக்கம் மட்டுமன்றி விரிதலும் சக்தி செலவழியும் ஒரு தொழிற்பாடு பாதிப்படையும். இதனால் படிப்படியாக இருதயம் செயலிழக்கத் தொடங்கும்.

4. **குருதிக் குழாய்கள் :**
இழையங்களது தொழிற்பாட்டு நிலைமைகளுக்கு ஏற்ப குருதி விநியோகத்தை நெறிப்படுத்த குருதிக் குழாய்களின் செயற்பாடு சிறப்பாக இருத்தல் வேண்டும். நீரிழிவு நிலைமைகளின் போது குருதி குழாய்களின் இந்த செயற்திறன் படிப்படியாக தொய்வடைந்து செல்கின்றது.

5. **சதையீ பாதிப்பு :**
இன்சுலின் சுரப்பு கலங்களை பாதிக்கின்ற அழற்சி காரணங்களின் தொடர்ச்சியான பாதிப்பால் சதையியின் ஏனைய கலங்களும் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக இன்சுலின் தொழிற்பாட்டிற்கு எதிராக சமநிலை பேணும் குளுக்கோசை சுரக்கும் கலங்களும் காலப்போக்கில் அழிந்து விடுகின்றன.

6. **மூளையின் தொழிற்பாட்டில் ஏற்படும் பாதிப்புக்கள் :**
இன்சுலின் தொழிற்பாடு மூளையின் வினைத்திறனுடன் சம்மந்தப்பட்டது. இதனால் நினைவாற்றல், மற்றும் மனவளம் என்பன பாதிக்கப்படும். குருதிக் குழாய்களில் ஏற்படும் பாதிப்புக்கள் காரணமாக குருதி விநியோகம் பாதிக்கப்பட்டு பாரிஷவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **கண்கள் :**
மூளையின் சாளரங்கள் கண்கள் விழித்திரை, கண்வில்லை, என்பன நீரிழிவினால் மிகவும் பாதிப்படைகின்றன. குளுக்கோசு மட்ட தளம்பல், விற்றமின்கள் மற்றும் நுண்சக்திகளின் குறைபாடு காரணமாகவும் விழித்திரைகளின் செயற்றிறன் குறைகின்றன.

8. **பாலியல் குறைபாடுகள் :**
நீரழிவு நோயாளர்கள் பாலுறவில் நாட்டமின்மை, ஆண்களில் ஆணுறுப்பு விறைக்காமை போன்ற குறைபாடுகள் ஏற்படுகின்றன.

9. **கால்கள் :**
குருதி சுற்றோட்டத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் கால்களை வெகுவாகப் பாதிக்கின்றன. விரல்கள், பாதங்களின் பகுதிகள் சிலவேளை அழுகிப்போகின்றன. சத்திர சிகிச்சையின் மூலம் பழுதான பாகத்தை அகற்ற வேண்டியுள்ளது.

10. **தோல்கள்** குருதிச் சுற்றோட்டம் மற்றும் நரம்புத்தொழிற்பாடுகள் மந்தமடைவதால் தோலின் கட்டமைப்பிலும் தொழிற்பாட்டிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. ஆறாத காயங்கள், தோலின் நிறமாற்றம் என்பன ஏற்படுகின்றன.

## நோயறியும் பரிசோதனைகள்

சிறுநீர், குருதி மாதிரிகளை சோதித்து நீரிழிவு கண்டறியப்படுகின்றது.

1. **சிறுநீர்ப்பரிசோதனை:** குளுக்கோசுடன் கீற்றோ அமிலங்களுக்காகவும் சிறுநீர் சோதிக்கப்படுகின்றது. இது இரு வகைப்படும்.

I. **செப்பு சல்பேற்று முறை:** இது சிறுநீரிலுள்ள குளுக்கோசு, புறக்ரோசு, விற்றமின் உள்ளிட்ட சில பதார்த்தங்கள் தாக்கமடையும் தன்மையினை வெளிப்படுத்தும்.

II. **குளுக்கோசு ஒக்சிடேசு முறை:** இம்முறையில் குளுக்கோசுடன் தாக்கமடையும் நொதியும் பயன்படுகின்றது. இதனால் குளுக்கோசின் தன்மையை இது பிரதிபலிக்கும்.

2. **குருதிப் பரிசோதனை :** இச்சோதனை நாளத்திலிருந்து வெளிப்படும் மாதிரியில் பொதுவாக மேற்கொள்ளப்படும். மேலும் குருதி மயிர்த்துளைக்குழாய்களில் பெறப்படும் (விரல்நுனி) மாதிரியிலும் மேற்கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. உண்ணாநிலை குளுக்கோசு மட்டம்
II. உணவின் முன்னான குளுக்கோசு மட்டம்
III. உணவின் பின்னரான குளுக்கோசு மட்டம்
IV. எழுந்தமான குளுக்கோசு மட்டம்
V. குளுக்கோசு சவால் சோதனை
VI. குளுக்கோசு ஏற்புத்திறன் சோதனை

குருதிச் சோதனையில் சிறப்பான, தீர்க்கமான முடிவைத்தரும் சோதனை முறை குளுக்கோசு ஏற்புத்திறன் சோதனையாகும்.

## நீரழிவிற்கான சிகிச்சை முறைகள்

**I. இன்சுலின் :**

இரண்டாம் வகை நீரழிவு நோயாளர்களின் சிகிச்சையில் இன்சுலின் முக்கியத்துவம் பெறுகின்றது. மருந்துகளால் கட்டுப்படுத்த முடியாத போது இன்சுலின் பாவிக்கப்படுகின்றது. சத்திரசிகிச்சை இதயத்திற்கு கடுமையான கிருமித் தொற்று ஆகிய நிலைகளில் இன்சுலின் பயன்படுத்தலாம்.

**II. மெற்போமின் :**

இன்சுலின் கலங்களின் மீது தொழிற்படுத்தும் ஆற்றலை மேம்படுத்துகின்றது. உடலை உருக்கும் தன்மையுடையது.

**III. கிளிபென்கிளமைட்டு:**

டயனில் என்று அழைக்கப்படுகின்றது. இம்மருந்து நீண்ட நேரம் தொழிற்படும் இயல்புடையது. ஒரு நாளைக்கு ஒரு தடவை அல்லது இரு தடவை பரிந்துரைக்கப்படுகின்றது. உணவுக்கு 30 நிமிடத்திற்கு முன் பாவிக்க வேண்டும்.

**IV.கிளிக்ளசைட்டு :**

இம்மருந்து இன்சுலின் சுரப்பைத் தூண்டும் தன்மையும், இன்சுலின் செயற்திறனை மேம்படுத்தும் தன்மையும் கொண்டது. உணவின் பின் தேவைப்படும் இன்சுலின் சுரப்பை உறுதிப்படுத்துவதில் துணை புரிகின்றது.

**V. ஏனைய மருந்து வகைகள் :**

SGLTP$_2$ Inhibitors(EG: Canaglifiosin) AMYLIN ANALOGUE (Eg: Pramlintide) Dual DPPR Inhibitors (EG: Saroglitazar)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரிழிவு நெருங்காதிருக்க..

கொள்ளை நோயாகிய நீரிழிவு நோயை இல்லாமல் அல்லது கட்டுப்படுத்த முடியும். எனவே பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

I. **பரம்பரை** : தமது பரம்பரையில் அதிகமாக நீரழிவு நோய் காணப்படும் போது வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் போது இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

II. **சூழல்** : இயற்கை எழில் கொஞ்சும் சூழல், சுத்தமான காற்று, தூயகுடிநீர், அமைதியான இரவு என்பன மனதிற்கு புத்துணர்ச்சியூட்டும். எனவே கடற்கரை, பூங்கா, கோவில் என சுற்றி வருதல் வேண்டும். இதன் மூலம் மனதுக்கும் உடலுக்கும் புத்தாக்கம் ஏற்படும்.

III. **உடற்பிரயாசை** : நாம் தினமும் உடலில் வியர்வை சிந்தும் வரை வேலை செய்தல் வேண்டும். அப்படி வேலை செய்யமுடியாதவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும். அவற்றில் ஈடுபடாதவர்கள் வேகநடைப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, நடனம், யோகாசனம், சைக்கிள் ஓட்டம் முதலிய செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.

IV. **இசை** : மனதிற்கு இதமான இசையினை ரசித்தல் இதன் மூலம் மனம் அமைதியடையும். உள்ளம் ஆறுதலடையும். இசையை செவிமடுப்போரின் நீரிழிவுக் கட்டுப்பாடு மேம்படுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

V. **நித்திரை** : அன்றாட நுண்கட்டமைப்பு சீர்கேடுகள் சரிசெய்யவும், உடல் வளர்ச்சிக்கும், கற்றவற்றை சீர்தூக்கி இசைவாக்கமடையவும், ஞாபகப் பெட்டகத்தை நிரப்பிக் கொள்ளவும் நித்திரை அவசியம். நித்திரையானது இன்சுலின் போன்ற ஹோர்மோன்களின் செயற்றிறன் பேணுவதற்கு அவசியமாகின்றது. அளவுக்கு மிஞ்சினால் நித்திரையும் நஞ்சுதான். அமெரிக்க நோய்கள் தடுப்பு பணியகம் மிகக்கூடுதலாக தூங்குபவர்களுக்கு குருதியமுக்கம், நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI. **மதுசாரம், புகைபிடிப்பதைத் தவிர்த்தல்** : அதிகளவான மதுபாவனை இன்சுலின் செயலாற்றலை மழுங்கடிப்பதோடு ஈரலழர்ச்சி இதயநோய், பாரிஷவாதம் என்பவற்றை ஏற்படுத்துகின்றது. எனவே அதிகளவு மது அருந்துவதை தவிர்த்தல் வேண்டும். சிகரட் புகையில் காணப்படும் பல்வேறு நச்சுப்பதார்த்தங்களும் உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. புகைத்தல் நீரிழிவிற்கு காரணமாக அமைகின்றது.

VII. **நிர்ப்பீடனம்** : நிர்ப்பீடனம் ஊசி மூலம் நீரிழிவினை தடுக்க முடியும்.

VIII. **மருந்துகள்** : வைத்தியரின் ஆலோசனைக்கேற்ப உரிய மருந்துகளை உரிய வேளையில் உட்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீரிழிவினைக் கட்டுப்படுத்தலாம்.

IX. **வீட்டுத்தோட்டம்** : சந்தையில் வாங்கும் காய்கறிகள் பீடை கொல்லிகள், இரசாயன வளமாக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை இன்சுலின் செய்திறனை மங்கிப்போகச் செய்கின்றன. நீரிழிவு நோய்கள் ஏற்படுகின்றன.

எமக்குத் தேவையான காய்கறிகளையும், இலைகறிகளையும் எமது வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்ய வேண்டும்.

**பசியும் உணவும்**

**"பசியாத போது புசியாதே"** என்பது பழமொழி. புசியாத போது உணவை உள்வாங்கி அதன் சக்தியை பிரித்தெடுத்துப் பயன்படுத்த தயார் நிலையில் உடற்தொகுதிகள் இல்லை. எனவே இந்நிலையில் உண்ணுவது உடற்தொகுதியின் சீராக்கத்திற்கு குழப்பமாக அமைந்து விடுகின்றது.

பசி உள்ள போது புசியாமல் பின் போடுவதும் உடற்தொகுதிக்கு பயிற்சியாக அமையலாம். ஆனால் பசிக்கும் போது இரைப்பையில் சுரக்கின்ற அமிலம் அது செயற்படத் தேவையான உணவுக்களம் உள்ளே வராத போது களத்திக்குள் பாய்கின்றது. இரைப்பையும் சுற்றுப் பிய்த்துப் பாய்கிறது. இந்த உபாதையினால் பிறகு உணவு உண்பது கடினமாகின்றது. நமது உடலின் தேவைக்கேற்ப உணவுகளை தேவையான அளவில் உட்கொள்வதற்கும், தீமை பயப்பவற்றை ஒதுக்கி வைப்பதற்கும் பழகிக் கொள்ள வேண்டும்.

**"ஒரு வேளை உண்பவன் யோகி,**
**இரு வேளை உண்பவன் போகி,**
**மூவேளை உண்பவன் ரோகி"**

என்பது முன்னோர் வாக்காகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலை உணவை ராஜா போல் சாப்பிடு, மதிய உணவை நண்பனுடன் பகிர்ந்து கொள், இரவு உணவை எதிரியிடம் கொடுத்துவிடு** என்பது நவீன காலத்து ஆலோசனையாகும்.

நாம் இரவில் கூட வயிறு முட்ட சோறு சாப்பிடுகின்றோம். இதனால் பகல் பொழுதில் வேலை செய்ய வேண்டிய சக்தி சரியாகக் கிடைக்காததோடு இரவில் அபரிதமாக கிடைக்கும் உணவு உடலில் கொழுப்பாக சேமிக்கப்படுகின்றது. அத்தோடு சமிபாட்டுப் பொறிமுறைகள் இரவில் விழித்திருப்பதால் மூளைக்கும் இழையங்களுக்கும் உரிய ஓய்வு கிடைப்பதில்லை. பகல் வேளையில் உடல் எதிர்கொள்ளும் சவால்களால் ஏற்படும் நுண்சிதைவுகள் இரவில்தான் பெரும்பாலும் சீர்செய்யப்படும். ஆனாலும் உடல் பொறிமுறைகள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதால் இந்த வாய்ப்பு நழுவிப் போகின்றது. இதன் விளைவாக உயர்குருதி அமுக்கம், நீரிழிவு நோய்கள் ஏற்படுகின்றன.

ஒரே விதமான உணவைத் தவிர்த்து விதவிதமான உணவுகளை உட்கொள்ளலாம். தவிட்டரிசு சாப்பிடுதல் நல்லது. மாப்பொருள் கூடிய கிழங்கு வகைகளையும் காய்கறிகளையும் சாப்பிடுவதைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படிச் சாப்பிட நேர்ந்தால் சோற்றின் அளவைக் குறைக்க வேண்டும். குரக்கன், தினை, சோளம், பயறு, கௌபி, கடலை போன்ற தானிய வகைகளையும் சாப்பிட வேண்டும். அத்தோடு மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி போன்ற கொழுப்புள்ள உணவுகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதிக உப்புக் கலந்த உணவுகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். உப்பு சிறுநீரகத்திற்கு அதிக வேலையைக் கொடுப்பதோடு குருதி அமுக்கத்தையும் கொடுக்கின்றது. இனிப்புப் பண்டங்களை தவிர்க்க வேண்டும். உணவு உண்பதற்கு முன் பழவகைகளை அல்லது எலுமிச்சைச் சாற்றை எடுப்பது சமிபாடு அடைவதோடு விற்றமின்களையும் கனியுப்புக்களையும் தருகின்றது.

## உணவு வகைகளும் உட்கொள்ளும் அளவும்.

### மாப்பண்டங்கள்

- சோறு, பாண், இடியப்பம், பிட்டு, குரக்கன், தோசை, இட்லி, பயறு கௌபி
- சிவப்பரிசியிலும் வெள்ளையரிசியிலும் சக்திப் பெறுமானம் ஒன்றுதான். ஆனால் சிவப்பரிசியில் விற்றமின்கள், நார்ப்பொருட்களின் சேர்க்கை அதிகமாகும். இதே தன்மை குரக்கனிலும் உள்ளது.
- கைத்குத்தரிசு - 50%

  சீனிக்குறிகாட்டி

  சம்பா அரிசி, சீனிக்குறிகாட்டி – 56 - 58%


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னியரிசி, சீனிக்குறிகாட்டி — 75%

அளவு — 5 — 14 பங்குகள் (கைப்பிடிகள்)

**பழங்களும் மரக்கறிகளும்**

நார்த்தன்மையுள்ள மரக்கறிகள் உ+ம் புடலங்காய், நாடங்காய், பாகல், பீர்க்கங்காய், கீரை வகைகள்.

அளவு — 5 பங்குகள் (கைப்பிடிகள்)

பால் பொருட்கள்

பால்,தயிர், சீஸ், முதலியன.

அளவு : 190 மி.லீ பால்

சிறிய யோகட் கோப்பை — தயிர்

தீப்பெட்டி அளவிலான சீஸ் (45கிராம்)

அளவு : 3 கைப்பிடி

மீன், முட்டை, இறைச்சி

இறைச்சி — 60 கிராம்

முட்டை 2

மீன் - 120கிராம்

பருப்பு, பயறு — 2 மேசைக்கரண்டி

**கொழுப்பும் சீனியும் உள்ள உணவுகள்**

அளவு : 4 பங்கு

உணவுகளில் அதிகம் உப்பு, எண்ணெயினையும் செயற்கை சுவையூட்டிகளையும் தவிர்த்தல்.

**தேடலும் தருகையும் : திரு.எஸ்.ரகுபதி.**

**மூலாதாரம் : நூல் - நீரிழிவை வேரறுக்க**

**முத்து முருகமூரத்தி**

**(விசேஷ வைத்திய நிபுணர்)**

**இயக்குனர்**

**மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம்**

**மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை நுண்ணறிவு
# (Artificial Intelligence – AI)

இன்றைய உலகில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. அந்த வளர்ச்சியின் முக்கியமான ஒரு பகுதி தான் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) ஆகும். மனிதனின் சிந்தனை, அறிவு, முடிவெடுக்கும் திறன் போன்றவற்றைப் போல இயந்திரங்களும் செயல்படச் செய்வதே செயற்கை நுண்ணறிவு ஆகும்.

**AI என்றால் என்ன?**

AI என்பது கணினிகள் மற்றும் இயந்திரங்களுக்கு மனிதனைப் போல கற்க, நினைக்க, புரிந்து கொள்ள, முடிவெடுக்க உதவும் தொழில்நுட்பம் ஆகும். உதாரணமாக, குரல் அடையாளம் காணும் மொபைல் உதவியாளர்கள், முகம் அறியும் தொழில்நுட்பம், தானியங்கி கார்கள் ஆகியவை AI-க்கு உதாரணமாகும்.

AI எவ்வாறு செயல்படுகிறது?

AI இயந்திரங்கள் பெருமளவு தரவுகளை (Data) சேகரித்து, அவற்றை ஆய்வு செய்து, அதிலிருந்து கற்றுக் கொள்கின்றன. இதை Machine Learning என்று கூறுவர். மேலும், மனித மூளை போல செயல்படும் Deep Learning முறைகளும் AI-யில் பயன்படுத்தப்படுகின்றன.

எதிர்காலத்தில் AI மேலும் வளர்ந்து, மருத்துவம், கல்வி, விண்வெளி ஆராய்ச்சி போன்ற துறைகளில் முக்கிய பங்கு வகிக்கும். மனிதனின் வாழ்க்கையை மேலும் வசதியாக மாற்றும் திறன் AI-க்கு உள்ளது.

முடிவுரை

செயற்கை நுண்ணறிவு மனித வாழ்வில் மிக முக்கியமான தொழில்நுட்பமாக மாறியுள்ளது. அதை சரியான முறையில் பயன்படுத்தினால், சமூக வளர்ச்சிக்கும் மனித நலனுக்கும் பெரும் பயன் தரும். எனவே, AI-யை நன்மைக்காக பயன்படுத்துவது அனைவரின் பொறுப்பாகும்.

**தகவல் :இணையம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 14 | | 03 |
| 01 | | 01 |
| 1957 | | 2026 |



[illegible]

## அமரர். திருநாவுக்கரசு சத்தியசீலன் (JP)

[illegible] (SWO) [illegible]

[illegible]

S.U [illegible]

[illegible] S.U [illegible]

[illegible]

தகவல்

குடும்பத்தினர்

[illegible] 077 [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். திருநாவுக்கரசு சத்தியசீலன் (JP)

(முன்னாள் உ.தெ.வ. சபை தவிசாளரும், வருவில் புளியடிப்பிள்ளையார் ஆலய அறங்காவலர் சபை தலைவரும், கோட்டார்கல் தலைவரும், சமூக நலன்புரி அமைப்பு (SWO) வெளிக்குள நிறுவோகத்தும்)

**அவர்களின் ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 03 |
| 01 | 01 |
| 1957 | 2026 |



வருவில் புளியடி வாழ் பிள்ளையாரின்
ஏற்றமிகு உப தலைவர் ஏழில் தலைவருமாய்
இருந்தவர் சத்தியசீலன் இறைவனடி இன்று
இனிய திருவெம்பாவை இன்புறு தீர்த்த நாளில்
பெருமிதமாய் எம்பி பெருமான் திருவடிக்கு
புகுந்தார் இன்று புண்ணியவான் சாந்திபெற
பெருமானை நாமும் பணிந்திடுவோம் இன்று
பண்பாளன் ஆத்மா பரம்பதம் சாந்திபெற

சின்ன வயதிருந்தே சிறப்பான தொண்டனாய்
சேவையாற்றி மக்களுக்கும் மகிழ்வை கண்டஇவர்
முன்னாள் தவிசாளர் மூத்த அரசியல்வாதியும்
முன்னோர் வழிகாத்து மாறாமல் நின்றவர்
இன்னாள் சபையின் ஏற்ற உறுப்பினர்
எம்மைப் பிரிந்து எமைவிட்டுச் சென்றார்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்

அறப் பணிக்காக ஆலயங்கள் பலவென்று
அதையுறுத்து சமூக அமைப்புக்கள் பலவற்றும்
திறம்பட சேவையாற்றி திருப்தி கண்டவர்
துயரம் படைத்த தூயவர் இன்று
உறங்குவது கண்டு உளம் நொந்து அழுகின்றோம்
அவரவர்க்கு ஆறுதல் பகிர்கின்றோம்
அறப்பணியாளர் ஆன்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டுகிறோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயருடன்...
வருவில் அருள்மிகு ஸ்ரீ புளியடிப்பிள்ளையார்
ஆலய பரிபாலன சபையினர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். திருநாவுக்கரசு சத்தியசீலன் (JP)

([illegible])
([illegible] (SWO) [illegible])

**அவர்களின் ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்**

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 14 |  | 03 |
| 01 | | 01 |
| 1957 | | 2026 |

கண்ணகித்தாயார் ஆலயத்தில் கௌரவ நிர்வாகத்தில்
கலந்து கொண்டும் [illegible] காத்திரமானவர்கள்
புண்ணியத் திலகம் புகழ் திருநாவுக்கரசு மகன்
பண்பாளன் சத்தியசீலன் பரன்பாதம் சேர்ந்தார்
கண்ணீர் வடிக்கின்றோம் கவலையில் தவிக்கின்றோம்
கடவுளைப் பணிகின்றோம் கண்ணீர் காணிக்கைகளை
மண்ணில் விடுகின்றோம் மலர்மாலை சூடுகின்றோம்
குடும்பத்தின் ஆத்மா முத்திபெற பணிகின்றோம்

அன்பும் அறமுறுபட ஆலயத்தொண்டுகளும்
இனிய இல்லறமும் இன்புற்று புத்திரரும்
புன்னகையோடு பொறுத்துக்கொண்டு அமரர்
பார் மண்ணை கடந்த பண்பாளன் சத்தியசீலன்
எம்மவர் இனிய நாளில் எம்மைவிட்டு பிரிந்து
இறைவனடி சேர்ந்தார் ஆத்மா சாந்திபெற
இந்நாளில் எல்லோரும் இறைவனை பணிகின்றோம்

திருப்பணிகள் அனைத்திலும் தாராளமனதுடன்
தூய்மையான தொண்டன் தலைசிறந்தவராய்
திருநாவுக்கரசு மகன் [illegible] சத்தியசீலன்
காத்தானையிலும் தொடர்ந்து பணிபுரிந்தும்
எருவில் [illegible] ஏற்றமிகு [illegible]
எல்லோர் மனதிலும் இடம்பிடித்த காவலன்
அருமையுடன் தொண்டன் அரன்பாதம் சேர்ந்தார்
ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயருறும்...
எருவில் ஸ்ரீ கண்ணகி அம்மன்
ஆலய பரிபாலன சபையினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். திருநாவுக்கரசு சத்தியசீலன் (JP)

(முன்னாள் ம.தெ.எ.பற்று பிரதேச சபை தவிசாளரும், முன்னாள் ... உப தவிசாளரும்) சபை தலைவரும்,
வேளாளர் குலத் தலைவரும், சமுக நலன்புரி சபையின் (SWO) கௌரவ உத்தியோகத்தரும்)

### அவர்களின் ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்

எருவில் எனும் எம் பதியில் ஏற்றமிகு குடும்பத்தில்
எங்களை கட்டியாண்ட எங்கள் தலைவன்
அருமைமிகு மைந்தன் அன்பாளன் பண்பாளன்
ஆதரவாய் பேசி அணைக்கும் சிறப்பாளன்
திருநாவுக்கரசு மகன் தெய்வத்துள் சத்தியசீலன்
தெய்வமாய் புகுந்தாரென்று தேடுகின்றோம் நாங்கள்
பெருமகனே எருவில் வேளாளர் பெரும்புகழ் தலைவனே
பரமனடி சேர பரம்பாதம் பணிகின்றோம்

எம்குலத்தவரின் இன்பதுன்பம் அனைத்திலும்
எம்மோடு இணைந்து என்றும் நிற்பவர் நீ
உமைப்பிரிந்து ஏங்கித் தவிக்கின்றோம்
எங்கள் குலத்தவரின் முதற் தலைவன் நீ
அம்மாவாய் அப்பாவாய் அனைவரையும் காத்தவர் நீ
எம்மை தவிக்கவிட்டு ஏன் சென்றீர் சிதறென்று
தம்பணிக்கு நிகர் காணாதவர் தலைவா
தயங்கி அழுகின்றோம் தலைவனே உமைப்பிரிந்து

பரம்பரை அரசியலில் பழுதொன்றும் வாராமல்
பக்குவமாய் இன்றுவரை புகழ்காத்த மாமனிதர்
கரம் வாய்த்த தவிசாளராம் தலை நிமிர்ந்து நின்றவர்
தேசம் புகழ்கின்ற உபதவிசாளராம் தொண்டு புரிந்தவர்
கரம் கொடுத்து உதவும் கீர்த்தியுறு விவேகானந்தா சபையில்
கௌரவ உறுப்பினராம் கடமைபுரிந்தவர்
சீரான மாமனிதர் திருவெம்பாவை தீர்த்த திருநாளில்
தெய்வமாய் புகுந்தார் தெய்வமே பணிகின்றோம்

அன்பு மனைவிக்கும் ஆசையுள்ள மகனுக்கும்
ஆறுதல் எப்படி ஆற்றுவோம் நாங்களைய
என்ன செய்வோம் இறைவன் பிரித்து விட்டான்
என்றோ ஒருநாள் எல்லோரும் காண்போம்
அன்றுவரை தவிக்கின்றோம் ஆண்டவனை வேண்டுகின்றோம்
அன்புத் தெய்வமே ஆறுதல் அடைய உம்மை
இன்று இனியென்றென்றும் எல்லோரும் வேண்டுகின்றோம்
ஈசனடி சேர

**பிறப்பு**
**14**
**01**
**1957**



**இறப்பு**
**03**
**01**
**2026**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயருடன்...

எருவில் வேளாளகுல மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி..!

மண்ணில்
1957
01
14



விண்ணில்
2026
01
03

**அமரர்.திருநாவுக்கரசு சத்தியசீலன்**

கண்ணிரெண்டும் நீர்சொரிய காலிரெண்டும் நடையிழக்க
சொந்தமென வந்த பந்தம் அந்தம் அடைந்ததனால்
உம்பெருமை சொல்லியழும் உறவுகளின் அழுகுரலை
ஒருமுறைதான் பாரீரோ!

இல்லறத்தை இனிதாக இயற்றி
அறிவுசார் மக்களைப் பெற்றெடுத்து
இனிதே இவ்வுலகில் வாழ்ந்து
ஈசனடி சேர்ந்துவிட்டீர்!

உத்தமனே உன்னிழப்பு ஈடில்லை என்றாலும்
பிறப்பொன்று நேர்ந்துவிட்டால்
இறப்பொன்று நிச்சயமே!
மீண்டும் நீர் பிறக்காமல்
பிறப்பில்லாப் பேரின்பம் கிட்ட பிரார்த்திக்கின்றோம்!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**நலன்புரிச்சங்கம்**
**பிரதேச செயலகம், போரதீவுப்பற்று**
**வெல்லாவெளி.**

விக்கி பிறிண்டர்ஸ் கோவில்போரதீவு - 0772977543



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளன்பு கூறல்


இறைபாதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் செய்தி கேட்டு நேரடியாக வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல், குறுஞ்செய்தி என்பன மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோர் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி பதாதைகள், பிரசுரங்கள் வெளியிட்டோர் இறுதிக்கிரியையில் பங்கு கொண்டோர், இத் துயர காலத்தில் ஆகாரம் தந்து உதவியோர் 31ம் நாள் நினைவு மலருக்கு ஆக்கம் தந்தவர்களுக்கும், அனைத்து வழிகளிலும் தோளோடு தோள் நின்று உதவி ஒத்தாசை புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குடும்ப வரலாறு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாளுடன் மகிழ்ச்சியாக நிழல் படம் எடுத்த போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மகன் மேருகாசன் க.பொ.தர (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றமைக்கான கௌரவத்தின் போது....



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்ற வரைபடத்தில்
நாம் எப்படி இருக்க வேண்டும் என்பது
ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது!
வாழும் நாள்வரை விரும்பி
வாழப் பழகு...
வாழ்க்கை இன்பமாகும்...!

"வாழ்க்கையில் எதையாவது
இழக்கும்போது
எண்ணிக்கொள்...
வாழ்வில் நீ இழந்ததைவிட,
சிறப்பான ஒன்றுக்காக
வாழ்க்கை உன்னை
தயார் செய்கிறது என்று..!"

LIKE MULTISHOP. PANDIRUPPU - 0754306020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org